உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# ஸ்ரீலஸ்ரீ - சுவாமி வேதாசலம்

அவர்கள் பெருமையும்,

அவர்கள்மீது பொறாமையுற்றார் சிலர் சிறுமையும்,

நாட்டுக்கோட்டைச் செட்டிப் பிரபுக்கள் தரும முறைமையும்.

நாகை - ஸி. கோபாலகிருஷ்ண பிள்ளை,

(1914)

2083
Dr U V S IYER LIBRARY,
MAHAMAHOPADHYAYA

MADRAS:
PRINTED AT THE VAIJAYANTI PRESS,
MAY, 1914.

திருச்சிற்றம்பலம்.

திருஞான சம்பந்தகுருவே போற்றி.

# ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசலம் அவர்கள் பெருமையும், அவர்கள்மேற் பொருமையுற்ருர் சிலர் சிறுமையும், நாட்டுக்கோட்டைச் செட்டிப் பிரபுக்கள் தரும முறைமையும்.

“அழுக்கா றெனஒரு பாவி திருச்செற்றுத்
தீயுழி யுய்த்து விடும்”

“புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாதல்
அறங்கூறும் ஆக்கந் தரும்.”

அறிவிற் சிறந்த பரிசுத்தர்களை இகழ்ந்து பழியையும் பாவத்தையும் பரப்பி அவித்தையின் பிரபாவத்தைக் காட்டும் போலிப் பத்திரிகைகள் ஒரு சிலவற்றில் அவற்றிற்கு உரிய வெள்ளறிவுடையார் சிலரும், அவரோடொத்த போலிமாக்கள் சிலரும், சைவசித்தாந்த ஞானசூரியனாய் விளங்கிவரும் ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசலம் அவர்கள் சென்ற பதினாறு பதினேழு வருடங்களாகச் செய்து போதரும் அரும்பெருஞ் சிவபுண்ணிய சிவஞானச் செயல்களைக் கண்டும், அவற்றால் அவர்கட்குச் சேதுமுதல் இமயபரியந்தம் அழியாப் பெரும்புகழும், அறிவின் மிக்க சான்றோர் நன்கு மதிப்பும் பரம்பி வளர்தலை யுணர்ந்தும் பெரிதும் மனம்புழுங்கித் தமது மனப்புழுக்கத்தை ஆற்றுதற்கு வேறு வழி காணுமையின், சுவாமிகளைத் தமக்குத் தோன்றியவா றெல்லாம் புறம் பழித்துப் பொய்யுரைகளை எழுதியும், அங்ஙனம் எழுதிய புரையுரைகளைத் தமக்கிசைந்தாரிடத்துக் காட்டித் தம்முள் நலம் பாராட்டியும், தம்மயக்கச் சொற்கேட்டு அறிவு முடமாய்ப்போன பேதையாயினாரைத் தமது புன்செயலுக்குத் துணைகூட்டி மகிழ்ந்தும் பெரியதோர் ஆரவாரம் செய்கின்றார்,

அவர்தம் வெற்றுரவாரவுரைகளைக் கண்ட அறிஞர், சுவாமிகளின் அருமை பெருமைகளை நன்கு உணர்வாராதலால், அவ்வெற்றுரைகளை ஒரு பொருட்படுத்தாது ஒழித்து அவற்றை யுரைப்பார் பாவச் செயலுக்கே மிக இரங்குவாராயினர். இனிச் சுவாமிகள் பெருமை நன்குணராத சிற்சிலரும், தமக்கென ஓர் அறிவிலாது பிறர் கூறும் புறங்கூற்றுரை கேட்டு மயங்குவாரும், அவர் மயக்க வுரைகளின் வயப்பட்டுச் சுவாமிகளால் விளையும் அரும் பெரும் பயன்களைப் பெறாது இழந்து போவாராகலின், அவர் அங்ஙனம் அவற்றை இழவாமைப்பொருட்டு முதலிற் சுவாமிகளின் பெருமைகளை ஒரு சிறிது விளக்கிப் பின்னர்ச் சுவாமிகண்மேல் அழுக்காறு கொண்டு திறம்புவார் பொய்ம்மொழிகளை ஆராய்வாம்.

சுவாமிகள் தமது இளமைப் பிராயத்தில் ஆங்கில கலாசாலையில் ஆங்கிலக் கல்விபயின்று வருகையிலேயே, தமிழ் நூல்களையும் கற்றற்கு மிக்க விருப்பம் உடையவராகி, அப்போது நாகபட்டினத்திற் புத்தக வியாபாரம் செய்துகொண்டிருந்த தமிழாசிரியர் ஸ்ரீமத் – வெ. நாராயணசுவாமிப் பிள்ளையவர்களிடத்தில் இலக்கண இலக்கியங்களை முறையாகக் கற்கத் துவங்கினார். இந்த நாராயணசுவாமிப் பிள்ளையவர்கள், மகாவித்துவான் ஸ்ரீமத்-மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களிடத்து அரிய பெரிய தமிழ் இலக்கியங்களையும், அக்காலத்தில் ஐந்திலக்கணங்களினும் மிக வல்லுநராய் விளங்கிய ஸ்ரீமத்-முத்துவீரைய உபாத்தியாயரவர்களிடத்துத் தமிழ் இலக்கணங்கள் பலவற்றையுங் கற்று, அக்கல்வி யறிவாற் கண்ட பயன் அடக்கமும் நல்லொழுக்கமுமே யாம் என்பதைத் தம்மிடத்து விளங்கக் காட்டித் திகழ்ந்தனர். ஒருகால் இவர்கள் மலையாள நாட்டில் யாத்திரை செய்தபோது, மனோன்மணிய ஆசிரியரும் திருவனந்தபுர மகாராஜா கலாசாலை ஆங்கில தத்துவசாத்திர போதகாசிரியருமாய் இருந்த ஸ்ரீமாந் - பெ. சுந்தரம் பிள்ளை, எம்.ஏ., அவர்களை அவர்களது இளம் பருவத்திற் சந்தித்து அவர்களுக்குத் தமிழ் மொழியைக் கற்பித்தவர்கள். சிலகாலம் நாகூரில் வசித்தபோது ஸ்ரீமாந் - வா. குலாம்காதிறு நாவலரென்பவருக்குத் தமிழ் நூல்கள் கற்பித்து அவரைத் தமிழில் வல்லவராக்கினவர்கள். இன்னும் இவர்களிடத்தில் தமிழ் கற்ற மாணவர் பலருண்டு. இத்துணை அருமை பெருமை வாய்ந்த தமிழ் நல்லாசிரியரிடத்திலே சுவாமிகள் தமது இளம்பிராயத்தில் தொல்காப்பியம், இறையனாரகப்பொருள் முத

DR. U. V. S. IYER LIBRARY,
BESANT NAGAR, MADRAS-90.

விய இலக்கணங்களையும், திருக்குறள், திருச்சிற்றம்பலக்கோவை யார், பத்துப்பாட்டு, தணிகைப்புராணம் முதலிய அரும்பேர் இலக்கியங்களையும், அன்னம்பட்டரியற்றிய தருக்க சங்கிரகத்தை யும் முறையாக ஓதியுணர்ந்து தமது பதினெட்டாவது வயதிலேயே அருந்தமிழ்க் கல்வியறிவு நிரம்பித் தம்மைக் கண்டவரெல்லாம் "இவ்வளவு இளம் பிராயத்திலே இவ்வளவு சிறந்த பெருங்கல்வி வாய்க்கப் பெறுதல் அரிதரிது; இவர் பெருந்தவம் உடையார்" என்று வியந்து கொண்டாடும்படி விளக்க முறுவாராயினர். தமது பத்தொன்பதாவது வயதில் ஒருமுறை நம் சுவாமிகள் தம் தமிழா சிரியரோடு திருவனந்தபுரம் சென்று மேற் சொன்ன சுந்தரம் பிள்ளையவர்களைச் சந்தித்தபோது, அப்பிள்ளையவர்கள் சுவாமிக ளின் தமிழறிவை ஆராய்ந்து பார்த்து மிகுந்த வியப்புடையவராகிப் பெரிதும் அகம் மகிழ்ந்து அதனைப் பாராட்டி எழுதின நற்சாட்சிப் பத்திரம் இன்னும் உளது.

இன்னும் நம் சுவாமிகள் தமது பதினாறுவது வயது முதற் கொண்டே உலகோபகாரமான பல நற்செயல்கள் செய்யத் துவங்கி னார். இவர்கள் ஆங்கிலகலாசாலையிற் படித்தநாட்களிலேயே தமது கல்வியுயர்ச்சியானும், நற்குண நற்செய்கைகளானும் தம் உடன் மாணாக்கர்களும் தமக்கு மேல் வகுப்பிற் படித்த மாணாக்கர்களும் தம்மை விரும்பி நட்புக்கொள்ளும்படி விளங்கினார். அப்போது தம் கலாசாலை மாணாக்கர்களையும் மற்றவர்களையும் ஒருங்கு சேர்த்து 'இந்துமதாபிமானசங்கம்' என்னும்பெயரால் ஒரு சபைஸ்தாபித்து, ஆங்கிலமொழிக் கல்வியால் ஆங்கிலர் நடையுடை ஆசாரங்களைக் கற்றுக் கிறிஸ்து மதப்பற்று உடையவரான இந்து மாணவரையும் பிறரையும் திருத்தி, அவர்களெல்லாரும் இந்து மதத்திற் பற்று டையவராம்படி செய்வித்தார். அவ்விளம்பிராயத்திலேயே இவர் தமது கல்வி நுண்ணறிவாற் பிரசங்கிக்கவும், பத்திரிகைகளுக்கு விஷயங்கள் எழுதவும் வல்லவரானார். அக்காலத்தில் நடைபெற்ற 'நாகை நீலலோசனி,' 'பாஸ்கர ஞானோதயம்,' 'திராவிடமந்திரி' முதலான பத்திரிகைகளில் 'முருகவேள்' என்னும் பெயரால் இவர்கள் பல அரிய விஷயங்கள் எழுதிவந்தனர். அக்காலத்தில் ஏகான்ம வாதி ஒருவர், வைதிகசைவசித்தாந்த சண்ட மாருதம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர நாயகரவர்கள் எழுதிய சைவசித்தாந்த தத்துவ விஷயம் ஒன்றனையும், தமது உபந்யாசத்திற் சொல்லிய

அகரமுதல வெழுத்தெல்லாம்" என்னும் முதல் திருக்குறட் பொருளையும் மறுத்து அவை தருக்க சாஸ்திரத்திற்கும் ஆங்கில பூதபௌதிக சாஸ்திரங்களுக்கும் இயையவில்லையென்று ஒரு கண்டனம் எழுதி வெளியிட்டார். அக்காலத்திலேயே நம் சுவாமிகள் தமக்குள்ள இலக்கண இலக்கிய தருக்க நுண்ணறிவின் மேன்மையாலும், நாயகரவர்களின் அமிர்தப் பிரவாகமான சைவசித்தாந்த உபந்நியாசங்களைக் கேட்டமையாலும் சிவஞான போதம் முதலிய ஞான நூல்களைப் பயின்று சைவசித்தாந்த அறிவுங் கூடப்பெற்றார். அங்ஙனம் அது கூடப் பெற்றதோடு ஆங்கில மொழியிற் பூதபௌதிக சாஸ்திரங்களும் நன்கு கற்றிருந்தமையால் நம் சுவாமிகள், நாயகரவர்கள் சொல்லியவற்றை அவ்வேகான்ம வாதியார் மறுத்து எழுதியவை சிறிதும் பொருந்தாமை தெளிய அறிந்து, நாயகரவர்கள் கூறிய பொருள்களே உண்மையாதலும் அவ்வேகான்மவாதியார் மறுத்தவை உண்மையாகாமையும் எல்லாருக்கும் இனிது விளங்க நியாய கண்டனங்கள் எழுதி 'நாகை நீலலோசனிப்' பத்திரிகையில் வெளியிடுவித்தார். அப்போதுதான் நம் சுவாமிகள் எழுதிய அந்தவிஷயங்கள் சென்னையிலிருந்த நாயகரவர்கள் பார்வைக்கு எட்டின. நாயகரவர்கள் அவ்விஷயங்களின் ஆழத்தையும் அருமையையும் பார்த்தவுடனே, "இவ்வளவு அருமையான கண்டனங்களை 'முருகவேள்' என்னும் பெயர் பூண்டு எழுதியவர் யார்?" என்று நாயகரவர்கள் நாகை வெளிப்பாளையம் சைவசித்தாந்த சபையார்க்கு எழுதிக் கேட்கவே, அவர்களும் இளம்பிராயத்தினரான நம் சுவாமிகளின் விசேடங்களை நாயகரவர்களுக்கு எழுதித் தெரிவித்தார்கள். அது முதல் நாயகரவர்கள் நம் சுவாமிகளைச் சந்திக்கும் விருப்பமுடையவரானார்கள். பின்னர்ச் சில மாதங்களில் நாயகரவர்கள் உபந்நியாசம் செய்தற்கு நாகை வெளிப்பாளையம் சைவசித்தாந்த சபைக்குவர, அப்போது நாயகரவர்களும் நம் சுவாமிகளும் சந்திக்க, நம் சுவாமிகள் கல்வியும் நுண்ணறிவும் நற்குண நற்செய்கைகளும் நிரம்பி இளஞாயிறுபோல் துலங்குதலைப் பார்த்து நாயகரவர்கள் வியந்து மகிழ்ந்து இவர்களிடத்து அளவுகடந்த அன்புடையவரானார்கள். அப்போது எவரிடத்துங் கல்லாமலே நம் சுவாமிகளுக்குச் சிவஞான போதம் முதலான ஞான நூலறிவும் நிரம்பி யிருத்தலையறிந்து நாயகரவர்களுக்கு எழுந்த மகிழ்ச்சியும் வியப்பும் அளவிடற்பாலன

வல்ல. அதன் பிறகு நாயகரவர்கள் சென்னைக்குத் திரும்பிச் சென்று அது முதல் நம் சுவாமிகளைச் சென்னைக்கு அழைத்துக் கொள்ளும் நோக்கமுடையவரானார்கள். அச்சமயத்தில் நாயகரவர்கள் தாம் பிரசுரிக்கக் கருதிய ' துகளறு போதம் ' என்னும் நூலுக்கு ஓர் உரை யெழுதி அனுப்பும்படி நம் சுவாமிகளுக்கு அறிவித்தார்கள். இது, சிவஞானபோத நூலாசிரியரான தெய்வப்புலமை மெய்கண்டதேவ நாயனார் மாணவருள் ஒருவரான சீர்காழிச் சிற்றம்பல நாடிகளால் அருளிச்செய்யப்பட்ட சைவசித்தாந்த அநுபவஞான சாத்திரமாகும். இத்தகைய அரியபெரிய ஞானசாத்திரத்திற்கு நம் சுவாமிகள் சைவசித்தாந்த நுணுக்கங்கள் காட்டி ஓர் அரிய உரை எழுதி நாயகரவர்களுக்கு அனுப்பினார்கள். அவ்வுரையைப் பார்த்து ' இது மாதவச் சிவஞான யோகிகள் உரையையே ஒப்பதாகும் ' என்று நாயகரவர்கள் வியந்து பாராட்டினார்கள். அக்காலத்திலேதான் சென்னையிலிருந்த ஏகான்மவாதி ஒருவர் எழுதிய 'முதற்குறள் வாதம்' என்னும் நூலுக்கு ஒரு நியாய கண்டனம் ' முதற்குறள்வாத நிராகரணம் ' என்னும் பெயரால் நம் சுவாமிகள் எழுத அதனையும் பாராட்டி நாயகரவர்கள் தாமே அதனை வெளியிடுவித்தார்கள். அதன்பிறகு நாயகரவர்கள் நம் சுவாமிகளைச் சென்னைக்கு அழைப்பித்துத், தம்மாணவரும் சிற்றூர் ஜில்லா முனிசீபுமான ஸ்ரீமாந் - ஜெ. எம். நல்லசுவாமிப்பிள்ளையவர்களோடு அவர்களை நட்புச் செய்வித்தனர். அப்பிள்ளையவர்கள் அப்போதுதான் 'சித்தாந்த தீபிகை' என்னும் பத்திரிகையைப் பிரசுரிக்கத்துவங்கி, அதன் தமிழ்ப் பதிப்புக்கு நம் சுவாமிகளையே விஷயங்கள் எழுதும்படி வைத்தார். அப்பத்திரிகையில் நம் சுவாமிகள் சிவஞானசித்தியார் அளவை இயலுக்கும், திருமந்திரப்பாடல், தாயுமானவர்பாடல் சிலவற்றிற்கும் எழுதிய உரைகளையும், குறிஞ்சிப்பாட்டு, அன்பு, அருள் என்னும் விஷயங்களைப்பற்றி எழுதிய விளக்க உரைகளையுங் கண்டு தமிழ் நாட்டிலுள்ள கற்றோரெல்லாரும் சுவாமிகளின் கல்வியறிவின் மாட்சிகளை மிக வியந்து பாராட்டினார்கள். இதுகாறும் கூறிய இத்தனை அரும்பெருங் காரியங்களும் சுவாமிகட்கு இருபத்தோராவது வயது நிறையும் முன் நிகழ்ந்தனவாகும்.

இனிச் சுவாமிகளுக்கு இருபத்தோராவது வயது நிரம்புகிற காலத்தே, சென்னை இராசதானியிலே மிகப் பிரசித்திபெற்றதும் மிகப் பெரியதுமான சென்னைக் கிறிஸ்துவ கலாசாலை

யிலே பி. ஏ., எப். ஏ., வகுப்புக்களுக்குத் தமிழ்போதிக்கும் ஆசிரியர் ஒருவர் வேண்டியிருந்தது. அவ்வுத்தியோகத்தைப் பெறுதற்கு விரும்பி விண்ணப்பங்கள் அனுப்பிய கற்றோர் அறுபது பெயர்கள் ஆவர். நாயகரவர்கள் நம் சுவாமிகளையும் தூண்டி அவ்வுத்தியோகத்தின் பொருட்டு முயல்கவென ஏவினார்கள். கலாசாலை யதிகாரிகள் அவ்வறுபது பெயர்களோடு நம் சுவாமிகளையும் பரிசோதனை செய்து பார்த்து, நம் சுவாமிகளே அவ்வரிய பெரிய உத்தியோகத்திற்கு ஏற்ற நிரம்பின கல்வியும் நற்குணங்களும் அமைந்தவர்களெனக் கண்டு அவர்களையே அதில் நியமித்துக்கொண்டார்கள். அங்ஙனம் நியமனம்பெற்ற நாள்முதல் சுவாமிகளுக்குச் சென்னையே வாழ்க்கையிடமாயிற்று. அந்நாள் தொட்டுச் சுவாமிகள் நாயகரவர்களிடத்து மிக நெருங்கிப் பழகுவாராயினர். அப்போது 'சிவஞானபோதம்' என்னும் ஞானநூலைக் குருசிட முறையிற் பாடங்கேட்க வேண்டுமென்னும் அவா நம் சுவாமிகளுக்கு எழுந்தமையால், அதனை நாயகரவர்களுக்கு விண்ணப்பிக்க, அவர்கள் "நம்முடைய உபந்நியாசங்களைக் கேட்டும், இலக்கண இலக்கிய தருக்க அறிவின் முதிர்ச்சியால் சிவஞானபோதம் முதலான ஞானநூல்களை ஓதியும் சைவசித்தாந்தப் பொருள்களைத் திருவருட் செயலாக நீ செவ்வையாகத் தெளிந்திருத்தலால், இன்னும் நீ நம்மிடம் நேரே பாடங்கேட்க வேண்டுவதும் உண்டோ?" என்று வினவத், "தாங்கள் அவ்வாறு கருதினாலும் எனக்கு இதனைக் குருமுகமாக ஓதியுணரல் வேண்டும் என்னும் அவா மிகுந்துள்ளது" என நம் சுவாமிகள் விண்ணப்பித்துக் கொண்டார்கள். அதன் மேல் நாயகரவர்கள் சிவஞானபோத நூலை, முறையாக நம் சுவாமிகளுக்குப் பாடஞ் சொல்லிவந்தார்கள். அங்ஙனஞ் சொல்லிவருகையில் இடையிடையே மிகவும் பொருள் இடர்ப்படும் இடங்களில் நாயகரவர்கள் "இவற்றிற்கு நீயே பொருள் உரை" என்னச், சுவாமிகள் அவ்வாறே தெளிவாக அவற்றின் பொருள்களை எடுத்து இனிது விளக்கி விடை சொல்லியபோதெல்லாம் நாயகரவர்கள் நம் சுவாமிகளின் நுட்ப அறிவினையும் உயர்ந்த சுபாவத்தையுங் கண்டு வியந்து அடைந்த மகிழ்ச்சிக் களவேயில்லை. நாயகரவர்கள் சென்னை மாநகரில் தாம் உபந்நியசிக்கச் சென்ற பெருஞ் சபைகளிலெல்லாம் நம் சுவாமிகளையும் தம்முடன் அழைத்துச் சென்று, தம்மோடு உபந்நியசிக்கும்படி செய்வித்து, அவர்களின் அரும்பெருங் கல்வித்திறத்

தையும், நுட்ப அறிவினையும், சொல்லாற்றல் முதலிய விசேடங்களையும் பலகால் வியந்தெடுத்துப் பேசியதுண்டு. அக்காலத்திலேயே சுவாமிகளின் உபந்நியாசங்களைக் கேட்டுச் சபையார் மிக்க மகிழ்ச்சி அடைந்து வந்தனர்.

சுவாமிகள் உத்தியோகத்தில் அமர்ந்திருந்த கலாசாலை ஏனைய கலாசாலைகளைப் போல்வதன்று; மிகச் சிறந்ததும் மிகப் பெரியதும் ஆகும். மற்றக் கலாசாலைகளில் பி. ஏ.; எப். ஏ. தமிழ்வகுப்புகளில் பத்து முதல் முப்பது பேர்க்குள்ளாகவே தமிழ் மாணவர் இருப்பர். சென்னைக் கிறிஸ்துவ கலாசாலையிலோ பீ. ஏ.; எப். ஏ. தமிழ் வகுப்பு ஒவ்வொன்றிலும் தொண்ணூறு முதல் நூறு பேர்வரையில் மாணக்கர் கூடியிருப்பர். இவர்களுக்குப் பாடங் கற்பிக்கப்படும் நூல்கள் திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை, பத்துப்பாட்டு, சீவகசிந்தாமணி முதலான உயர்ந்த சங்ககால இலக்கியங்களும் பிறவும் ஆகும். ஆங்கில கலாசாலைகளில் தமிழையும் தமிழ் கற்பிக்கும் உபாத்திமார்களையும் எளனம் பண்ணி அலட்சியமாய் ஒழுகுவது பெரும்பாலும் மாணக்கர் இயற்கை. ஆனால் நம் சுவாமிகள் தமிழாசிரியராய் அமர்ந்து தமிழ் நூல்களைப் பாடஞ் சொல்லத் துவங்கிய நாள் முதல் மாணக்கர்களுக்குத் தமிழினிடத்து மிகுந்த ஆசையும் சுவாமிகளிடத்து மிக்க அன்பும் உண்டாயின. சுவாமிகளின் சொல்லாற்றல் பொருள் நுட்ப அறிவு முதலிய விசேடங்களைக்கண்டு மாணக்கரெல்லாரும் அவர்களை நிரம்பவும் நன்கு மதித்து எங்கும் புகழ்வாராயினர். மற்றக்கலாசாலை மாணவர்களுங் கூடச் சுவாமிகள் போதனையைக் கேட்க வருவர். இவ்வாறெல்லாம் சுவாமிகள் புகழ் எங்கும் பரவவே, இவர்கள் உபந்நியாசங்களைக் கேட்டற்குச் சென்னையிலும் மற்ற நகர்களிலும் உள்ள மாணவரும் பிறரும் பெருஞ்சபைகள் கூட்டிச் சுவாமிகளை அழைத்து, அவர்கள் தமிழைப்பற்றியும் சமயஞான சன்மார்க்க ஞானங்களைப்பற்றியும் அரிய பெரிய உண்மைகள் உபந்நியசிக்கக் கேட்டு அறிவு விளங்கி நன்மைகள் பலவும் பெறலாயினர்கள். சுவாமிகள்பால் கலாசாலையில் தமிழ் கற்றமாணக்கர்கள் பதினாயிரம் பேருக்குமேல் இவ் விந்திய தேசமெங்கும் பரவிப் பற்பல உத்தியோகங்களில் அமர்ந்திருக்கிறார்கள். இமயகிரி முதல் இலங்கைவரையிற் பற்பல சபைகளில் உபந்நியாசங்களைக் கேட்டு அறிவு மிகப் பெற்றவர்கள் ஐந்து இலட்சம் பெயர்க்குமேல் இருக்கின்றார்கள்.

இனிச் சுவாமிகள் சென்னையில் வசிக்கத் துவங்கிய காலமுதல் ஆங்கில மொழியிலும், ஸமஸ்கிருத மொழியிலும் பல ஞான நூல்களையும் நன்கு ஆராய்ந்து வந்தமையின் அவற்றின்கண்ணுள்ள உயர்ந்த பொருள்களையெல்லாம் ஏராளமாகப் பெற்று அறிவில் அமைத்து நாண்மதிபோல் வளரலானார்கள். சுவாமிகள் தமது இருபத்திரண்டாவது வயதில் எழுதிய 'திருவொற்றி முருகர் மும்மணிக்கோவை'யினையும் 'சோமசுந்தரக்காஞ்சி'யினையும் தமிழ் நாட்டிலுள்ள பெரிய வித்துவான்கள் எல்லாரும் சங்கத் தமிழ் என்று பாராட்டியதோடு, சங்கப்புலவர்களே ஒன்றுதிரண்டு ஒருருவாய் 'வேதாசலம்' என்னும் பெயரோடு அவதாரம் பண்ணினார்கள் என்று நெஞ்சாரப் புகழ்ந்து பேசினர். இனித் தம் அருமைச் சித்தாந்த ஆசிரியராய், இராமநாதபுரம் பாஸ்கர சேதுபதி மன்னராற் 'சைவசித்தாந்த சண்டமாருதம்' என்னும் பட்டஞ் சூட்டப்பட்டவராய், இத்தென்னாடெங்கணும் சித்தாந்தக் கல்வியில் தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இன்றி உலாவிய ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர நாயகரவர்கள் சிவபதவி அடைந்தபிறகு, நம் சுவாமிகள் அவர்களது பிரிவாற்றாமையால் சிலகாலம் வருந்தியிருந்து, பின்னர் நாயகரவர்கள் தமக்குக் கூறிய "நமக்குப்பின் நாம் துவங்கிய சைவசித்தாந்த விளக்கத்தை நீயே நம் திருஞானசம்பந்தப் பெருமான் திருவருட்டுணைகொண்டு நன்கு நடத்திச் சித்தி பெறுவிப்பாய்!" என்னும் அமுதமொழிகளை நினைந்து, சைவசித்தாந்த விளக்கத்திற்கு ஒரு பெருங்கருவியாக ஞானசாகரம் என்னும் மாதாந்தப் பத்திரிகையைப் பிரசுரிக்கத் தொடங்கி இதுவரையில் அதன் ஆறு பதுமங்களை வெளியிட்டிருக்கின்றார்கள். இவ்வாறு பதுமங்களிலும் வெளிவந்திருக்கும் விஷயங்களின் சிறப்பை எடுத்து முழுதுஞ் சொல்வதற்கு நம்மால் முடியாது; தமிழ்நாட்டின்கண் உள்ள கற்றோரெல்லாரும் அவற்றின் அருமை பெருமைகளை உள்ளம்பூரித்துப் பாராட்டி எழுதிய அபிப்பிராயங்களிற் சில தனியே பதிப்பிடப்பட்டிருத்தலால், அவற்றிற் காண்க. ஞானசாகரப் பத்திரிகையினால் விளைந்த நன்மைகள் பல. திருத்தமும் தெளிவும் வாய்ந்த இனிய செந்தமிழ் நடையில் இதற்குமுன் வெளிவாராத பலப்பல அரும்பெரும் விஷயங்கள் இப்பத்திரிகையின்கண் எழுதப்பட்டு வந்தமையால், இவற்றைப் படித்து வித்துவான்கள் ஆனோர் பலர்; இதிற் காணப்பட்ட செந்தமிழ் நடையைப் பழகி நல்ல தமிழ்நடை எழுதக் கற்றுக்

கொண்டோரும் பலர்; இதில் வந்த விஷயங்களைப் படித்துப் பிரசங்கங்கள் செய்யக் கற்றுக்கொண்டோரும் பலர்; இதன்கண் ஆழமாக ஆராய்ந்து எழுதப்பட்ட இலக்கண இலக்கிய ஆராய்ச்சியுரைகளைப் படித்துத் தமிழ்நாற் பெருமைகளையும் அவற்றின் நுட்பங்களையும் அறிந்து மகிழ்ந்தோரும் பலர்; தெய்வப்புலமை திருவள்ளுவ நாயனரைப்பற்றியும் அவர் அருளிச்செய்த திருக்குறளைப் பற்றியும் எழுதப்பட்ட நுண்ணிய ஆராய்ச்சிகளைப் படித்து அறிவு மிகுந்தோரும் பலர்; வேத வேதாந்தங்களைப்பற்றியும் திருஞானசம்பந்தர், மாணிக்கவாசகர் முதலிய சைவசமயாசிரியன்மாரைப் பற்றியும் எழுந்த வியாசங்களைக் கற்றுச் சைவசமயப் பழமை மாட்சியுணர்ந்து மகிழ்ந்தோரும் பலர்; சைவசித்தாந்த பரமாசிரியரான மெய்கண்டதேவரை முதலாகக் கொண்ட சித்தாந்த குரவர் பெருமையும், அவர்கள் அருளிச்செய்த சிவஞானபோதம், சிவஞானசித்தியார் முதலான ஞானநூற் பொருளருமையும், அவற்றின்கட் போதிக்கப்பட்ட பதி பசு பாச இலக்கணங்களையும், திருக்கோயில், திருநீறு, பஞ்சாட்சரம், சிவயோகம், சிவஞானம், சிவபக்தி முதலானவற்றின் உண்மைகளையும் தெளிந்தோரும் பலர்; இத்தகைய உயர்ந்த பொருள்களை உண்மையோடு ஆராயவும் இவற்றை நடுவு நிலை பிறழாமற் பேசவும் எழுதவும் தெரிந்துகொண்டோரும் பலர்; மறுமை ஒன்று உண்டென்பதும், சூக்கும சரீரங்களின் இயல்பும் சரீரப் பாதுகாப்பின் முறைகளும் இதன்கண் உணர்ந்து நன்மைகள் எய்தினேரும் பலர்; இன்னும் இந்த ஞானசாகரப் பத்திரிகையால் விளைந்த நலங்களை எழுதப்புகின் இடம் போதாது. இதனைச் சிறிது படிப்பவர்களுக்கும் நாம் இதனைப்பற்றிச் சொல்லியன வெல்லாம் முழுதும் உண்மையா மென்பது நன்ருக விளங்கும்.

இனி, இதுவரையில் நம் சுவாமிகளால் ஞானசாகரத்தின் வாயிலாகவுந் தனியாகவும் இயற்றி வெளியிடப்பட்ட நூல்கள் வருமாறு: 'துகளறு போதவுரை' 'முதற்குறள் வாதநிராகரணம்' 'திருவொற்றி முருகர் மும்மணிக்கோவை,' 'சோமசுந்தரக்காஞ்சி,' 'சோமசுந்தரக் காஞ்சியாக்கம்,' 'முல்லைப்பாட்டாராய்ச்சியுரை,' 'பட்டினப்பாலை ஆராய்ச்சி யுரை,' 'பண்டைக்காலத் தமிழர் ஆரியர்,' 'சாகுந்தலம்,' 'குமுதவல்லி,' 'சிந்தனைக் கட்டுரைகள்,' 'போலிச்சைவரும் சாதி வித்தியாசமும்,' 'மக்கள் நூறுவருஷம் உயிர்வாழ்தல் எப்படி?,' 'மரணத்தின் பின் மனிதர்நிலை,' 'மனிதவசியம்,' 'கோகிலாம்பாள்

கடிதங்கள்' 'யோகசித்திரை,' 'தொலைவிலுணர்தல்,' 'திருக்குறள் ஆராய்ச்சி,' 'வேதாந்த சித்தாந்தம்,' 'சைவசித்தாந்த ஞானபோதம்,' 'சிவஞானபோத ஆராய்ச்சி' முதலிய பலவாம். இவையேயன்றி, நாகைநீலலோசனி, பாஸ்கரஞானோதயம், திராவிடமந்திரி, சித்தாந்த தீபிகை தமிழ், சித்தாந்ததீபிகை ஆங்கிலம், ஞானபோதினி, சித்தாந்தஞானபோதம், விவேக திவாகரன், சென்னைக் கிறிஸ்துவ கலாசாலை ஆங்கிலப்பத்திரம், ஞானசாகரம் முதலான பத்திரிகைகளில் நம் சுவாமிகளால் தமிழிலும் ஆங்கிலத்திலும் தனித்தனி வியாசங்களாக எழுதப்பட்ட விஷயங்களும் பலவுண்டு. இன்னும் இவ்விந்திய நாட்டின் மாத்திரமேயல்லாமல் அயல் நாட்டவர்களும் சைவ சித்தாந்தமுணர்ந்து கொள்ளும் பொருட்டு நம் சுவாமிகள் சொந்தத்தில் நடத்திய 'ஓரியண்டல் மிஸ்டிக் மைனு' என்னும் ஆங்கிலப் பத்திரிகை அமெரிக்கா, பிரான்சு, ஆஸ்டிரியா, ஜர்மனி, இங்கிலாந்து முதலிய நாடுகளினும் பரவிச் சைவசித்தாந்தம் விளக்கிய அருமை பெருமைகள் அறிவுடையோர் பலரும் அறிந்தனவேயாம்.

இனி இங்ஙனந் தம்முடைய இனிய உபந்நியாசங்களானும் பத்திரிகை புத்தகங்களானும் நம் சுவாமிகள் நந்தம் தெய்வச் செந்தமிழ் மொழியும் சைவசித்தாந்தமும் பெரும் பிரகாசமுற்றுத் துலங்கச் செய்தது மாத்திரத்தில் அமைதி பெறவில்லை. சைவசமயத்திற்கும் சைவர்களுக்கும் நம் சுவாமிகள் செய்த மற்றுமொரு பேருபகாரச் செய்கையினையும் இங்கெடுத்துக் கூறுகின்றோம்.

தமிழுஞ் சைவசித்தாந்தமும் உணர்ந்தோர் இத் தென்னாட்டின்கண் மிகச்சிலரே யாவர். இச்சிலரும் ஒருவரோடு ஒருவர் அன்பினால் அளவளாவி ஒற்றுமையாக இருந்து சைவசித்தாந்த ஞானத்தினை எங்கும் பரவச் செய்தற்குரிய பெரு நன் முயற்சி ஏதுஞ் செய்ததே இல்லை; ஏதேனும் ஒரு சிறு முயற்சி செய்ய நாலைந்து பேர் முன்வரினும், அவரும் தம்முள் ஒருவர்மேல் ஒருவர் பொறாமையுற்றுப் பொதுநலத்தைச் சிறிதுங் கருதாமல் தந்நலத்தையும் தமது பெருமையையுமே கருதி, ஒருவரை யொருவர் இகழ்ந்தும் புறங்கூறியும், எடுத்த அச்சிறு நன்முயற்சியினையுங் குலைத்துத் தாமுங் குலைந்து போவது வழக்கம். இதனால் தமிழும் சைவமும் நாளுக்கு நாள் ஒளிமழுங்க, அன்னிய பாஷைகளும் அன்னிய மதங்களுமே எங்கும் பரவலாயின. இதனைக் கண்ட நம் சுவாமிகள் சைவர்களை ஒன்று சேர்த்து, வருடந்தோறும் பிரதான நகரங்களிற் பெரிய ஒரு

சபை கூட்டி, அரிய பெரிய ஞானவிஷயங்களை எல்லாருந் தெரிந்து பயன் பெறும்படி செய்யவிக்க எண்ணினர்கள். சிவபெருமான் திருவருளும் அவர்களது நல்லெண்ணத்திற்கு உவந்து அவர்களது நன்முயற்சிக்கு உடன் நின்று உதவச் 'சைவசித்தாந்த மகாசமாஜம்' என்னும் ஒரு பெருஞ்சபை எட்டு வருடங்களுக்கு முன் நம் சுவாமிகளால் தாபிக்கப்படுவதாயிற்று. இப்பெருஞ்சபையினைத் தாபித்ததோடு மாத்திரம் இருந்து விடாமல், அதனைத்தொடர்பாக நான்கு வருடங்கள் அவர்கள் நடப்பித்துக்காட்டிய சிறப்புக்களும் விசேஷங்களும் தமிழ் நாட்டகத்துள்ளார் நினைவிற் பதிந்து இன்னும் பெருமகிழ்ச்சியினை விளைவித்துக்கொண்டிருக்கின்றன. அவ்வரிய சிறப்புக்களெல்லாம் உடனிருந்து கண்டுங் கேட்டும் அனுபவித்துப் பார்த்தவர்களுக்கன்றி ஏனையோர்க்கு எவ்வளவு எடுத்துச் சொன்னாலும் தெரியமாட்டா. ஒன்று கூடாத சைவர்களை ஒன்று கூட்டுதற்கு அவர்கள் பட்டபாடும், அவர்களிடத் தெல்லாம் அன்போடு அளவளாவி அவர்களுக்குச் செய்த உபசாரங்களும் எல்லாரும் எக்காலத்தும் மறவாமல் நன்றிபாராட்டுதற்கு உரியனவாம். பல ஊர்களிலிருந்தும் இம் மகாசமாஜக் கூட்டத்திற்குவந்த ஆயிரக்கணக்கான பிரபுக்கள், உத்தியோகஸ்தர்கள், வித்துவான்கள், உபந்நியாசர்கள், அன்பர்கள் முதலான எல்லார்க்கும் எல்லா வசதிகளோடு எல்லா உபசாரங்களும் செய்யப்பட்டன. சபைகூடிய மூன்று நாட்களினும் சபையின் அமைவுகளும் உபந்யாச முறைகளும் நம் சுவாமிகளால் மிகவுஞ் செவ்வையாக ஒழுங்கு செய்யப்பட்டதோடு, சுவாமிகள் உபந்நியாசங்களும் சபையைமிகவுஞ் சிறக்கச்செய்து ஏனை உபந்நியாசங்களுக்கு அரும்பெரு நன் மாதிரிகளாய்த் திகழ்ந்தன. இவ்வாறாகச், 'சைவசித்தாந்த மகாசமாஜத்தின்' முதல் இரண்டு வருஷக் கூட்டங்கள் சிதம்பரத்திலும், மூன்றும் வருஷக் கூட்டம் நாகபட்டினத்திலும், நான்காம் வருஷக் கூட்டம் திரிச்சிராப்பள்ளியிலுமாக அவர்களால் நடத்தப்பட்டன. முதல் வருஷக் கூட்டத்திற்குக் கொழும்பு ஆனரபிள் ஸ்ரீமான் இராமநாதர் அவர்களும், இரண்டாம் வருஷக்கூட்டத்திற்கு மதுரைப் புதுத் தமிழ்ச்சங்கத் தாபகர் ஸ்ரீமான் - பாண்டித்துரைத் தேவரவர்களும், மூன்றும் வருஷக் கூட்டத்திற்குச் சைவசித்தாந்தத்தை ஆங்கிலத்திற் பிரபலப்படுத்திவரும் ஸ்ரீமான்-நல்லசுவாமிப் பிள்ளையவர்களும், நான்காம் வருஷக்கூட்டத்திற்கு யாழ்ப்பாணம் ஆனர

பின் ஸ்ரீமான்-கனகசபையவர்களும் சுவாமிகளால் சபாநாயகர்களாக அழைக்கப்பட்டனர்கள். அவ்வொவ்வொரு வருஷ மூன்று நாட் கூட்டங்களுக்கும் உபந்நியாசங்களுக்கு வரவழைக்கப்பட்ட வித்து வான்களும் பலர். இங்ஙனம் சுவாமிகள் தங்நயஞ் சிறிதுங் கருதாமற் பொதுநலங் கருதி நடப்பித்துக் காட்டிய இந்தச் 'சைவசித்தாந்த மகாசமாஜ' வருஷப்பெருஞ்சபைகளை வந்து பார்த்தவர்கள் மிகவும் மனக்கிளர்ச்சியுடையவர்களாகி இத்தென்னாட்டிற் பல இடங்களிற் சபைகள் தாபித்தும், அவற்றிற்கு மூன்று நாட்கள் வருடோற்சவங் கள் கொண்டாடியும், முன்னமே தாபிக்கப்பட்டும் கிளர்ச்சியின்றிக் கிடந்த சபைகளைக் கிளர்ச்சிபெறச்செய்து திருவிழாக்கள் நடாத் தியும் எங்கும் சைவசமய உண்மைகளைப் பரப்பி வருகிறார்கள். இவ் வளவு முயற்சிகளுக்கும் உற்சாகங்களுக்குங் காரணமாய் நின்றது நம் சுவாமியவர்களின் 'சைவசித்தாந்த மகாசமாஜ' நன் முயற்சியே யாகு மென்பதனை எவரும் மறவாமல் நினைவுகூரக் கடமைப்பட்டி ருக்கிறார்கள்.

வேதாகம புராணேதிகாசங்களின் உண்மைப் பொருளாய் விளங்கும் சைவசித்தாந்தத்தை எங்கும் பரவச்செய்யுங் கருத்து ஒன்றையே மேற்கொண்டு நம் சுவாமிகள் தமது இளமைப் பருவம் முதற்கொண்டு இடைவிடாது செய்துவந்த பெரு முயற்சிகளால் மனிதருடைய சுபாவங்களை நன்கு அறியலானார்கள். சைவசித்தாந்த உண்மைகள் உலகமெங்குமுள்ள எத்திறப்பட்ட சமயிகளாலும் ஏற்றுக்கொள்ளத் தக்கனவா யிருந்தாலும், பெரும்பாலர் சைவம் என்னும் சொல்லைக் கேட்டவுடனே அதன்மேல் அருவருப் புற்று, அதனைக் கேளாமலும் அதனை ஆராயாமலும் அதன்பால் அலட்சியம் செய்து ஒழுகுகின்றார்கள். சைவ உண்மைகளை எல்லாருந் தெரிந்து பயன்பெற வேண்டுமென்பதே நம் சுவாமி களின் பெரு விருப்பமாதலால், சைவசித்தாந்தத்திற்கு மற்றொரு பெயரான 'சன்மார்க்கம்' என்னுஞ் சொல்லின் வழியாக பிர காசப்படுத்துவதற்கு எண்ணங் கொண்டார்கள். சைவசித்தாந்தம் என்னுஞ் சொல்லைக் காட்டாமல் சைவவுண்மைகளை மாத்திரம் எல்லார்க்கும் பொதுப்பட வைத்துத் தெய்வத் திருக்குறள் நூல் எழுதிய தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனாரது உயர்ந்த நோக்கத்தைப் பின்பற்றி அவ்வாசிரியர் பெயரால் 'சமரச சன் மார்க்க நிலையம்' என்னும் திருக்கழகத்தை நம் சுவாமிகள் தாபிப்

பாராயினூர்கள். சைவசித்தாந்தத்தின் முடிந்த உண்மைக் கொள் கைகளான சீவர்களினிடத்து அன்பு செய்யும் முறையினையும் சிவத்தினிடத்து அன்பு செய்யும் முறையினையும் இனிதெடுத்து விளக்கிக் காட்டுவதே இந்நிலையத்தின் அரும்பெரு நோக்கமாகும். எல்லாரையும் நல்லொழுக்கத்திலும் நற்சிந்தனையிலும் தெய்வ பத்தி யிலும் பழக்குவித்து அவர்களை மேன்மேல் உயரச் செய்வித்தலே இதனூற் செய்யப்படும் முயற்சியாகும். சைவசமயத்திற் பிறந்தும் தமிழ் ஞான நூலுணர்ச்சி யில்லாமையால் உலகத்தையே பொருளா கக் கொண்டு மனிதப் பிறவியை வீணுக்கி வாழ்நாட் கழிப்பவர்களை யும், தமிழறிவு இன்றி ஆங்கிலக் கல்விமாத்திரம் பெற்றமையால் தமிழையுஞ் சைவத்தையும் இகழ்ந்து அன்னியர் நடையுடை ஆசா ரங்களை மருவி மனிதப்பிறவியைப் பாழாக்குகின்றவர்களையும் எளி திற் சீர்திருத்தி நல்வழிப்படுத்துதற்குரிய உபாயங்கள் இந்நிலையத்தி னூற் செய்யப்பட்டு வருதலையறிந்த நல்லோர் நம் சுவாமிகளின் உயர்ந்த நுண்ணறிவின் பான்மையை மிகவும் வியந்து பாராட்டு கின்றூர்கள். இன்னும் இச்சமரச சன்மார்க்க நிலையத்தின் வாயி லாக நம் சுவாமிகள் உலகத்திற்குச் செய்யும் நன்மைகள் அளவிறந் தனவாய் வளரும்.

இனி நம் சுவாமிகள் பதின்மூன்று வருஷகாலம் சென்னைக் கிறிஸ்துவ கலாசாலையில் தமிழ்ப் போதகாசிரியராய் அமர்ந்து பல் லாயிரம் மாணவர்களுக்கு நல்லுபதேசங்கள் செய்து வந்தபோதிலும், மனிதர் சிலர் அதிகாரத்திற்குக் கீழ் அடங்கி அவருக்கு ஊழியக் காரன்போலிருந்து அந்நற்காரியஞ் செய்தலைவிடக் கடவுளின் அதி காரத்துக்குக் கீழ் நின்று அப்பெருமானுக்கு ஊழியக்காரனுயிருந்து சிவஞானத்தைப் பரவச் செய்தலே நலமாகும் என்றும், அங்ஙனம் செய்தற்குச் சமயம் எப்போது வாய்க்குமென்றும் நீண்ட நாளாக எண்ணி வந்தார்கள். ஆண்டவன் திருவருள் காட்டுங்காலத்தன்றி நம் சுவாமிகள் தாமாகவே எதுந் தான் என்னும் முனைப்போடு செய்வ தில்லை ; ஆனதுபற்றிக் கலாசாலை உத்தியோகத்தினின்றும் விலகுஞ் சமயத்தை திருவருளின் வழியே எதிர்நோக்கி யிருந்தார்கள். அச் சமயமும் வந்தது. சென்னைச் சருவகலாசாலையினர் தமிழ் முதலான சுதேசபாஷைக் கல்வியை அவசியப்படிப்பினின்றும் நீக்கிவிட்டமை யால் சென்னைக் கிறிஸ்துவ கலாசாலையில் தமிழ்ப்போதனை வேண் டப்படாதாயிற்று. அதனுல் தமிழ்ப்போதகாசிரியரும் வேண்டப்படா

ராயினர். இச்சமயத்தை ஆவலோடும் எதிர்பார்த்திருந்த நம் சுவாமிகள் தம் கலாசாலையார் தந்த பொருளுதவியைப் பெற்றுக்கொண்டு உடனே அவ்வுத்தியோகத்தினின்றும் விடுதலைபெற்றார்கள். சுவாமிகள் தமிழ் ஆங்கில மொழிகளில் மிகவல்லுநராய் விளங்குதலை நன்கு அறிந்த பிற இடங்களில் உள்ள அதிகாரிகள் உயர்ந்த சம்பளம் உள்ள வேறு உத்தியோகங்களில் அவர்களை அமர்விக்க விரும்பியும் "இனி ஒருகாலும் மனிதன் கீழ் உத்தியோகஞ் செய்வதில்லை; தேவ ஊழியமே செய்யக்கடவேன்" என்று சொல்லி அவர்கள் விருப்பத்திற்குச் சிறிதும் இணங்காராயினார்கள். முற்பிறவிகளிற் செய்த தவத்தின் மிகுதியால் தமது பிள்ளைமைப் பருவந்தொட்டே சிவஞானத்தில் அழுந்திய சிந்தையுடையவர்களான நம் சுவாமிகள் சிவானந்தத்தைப் பெறுதற்குரிய பக்குவமுடையவர்களாய்த் துலங்கினமையால், அவரவர் பக்குவம் அறிந்து நற்கதி கூட்டும் திருவருள், கலாசாலை உத்தியோகத்தில் அமர்ந்த நாட்களிலேயே இவர்கள் ஸ்ரீமத் சிவராஜயோக இராஜானந்தசுவாமி என்னுஞ் சற்குரு நாதனை அடைந்து, அவர்கள்பால் மெய்ப்பொருளுபதேசம் பெறும் படி கூட்டிவைத்தது. அவ்வுபதேசப்பொருளைத் தம்பால் அனுபவப் படுத்திக் கொள்வதற்கும் இஃது ஏற்ற சமயமாய் வந்ததனாலும், இலௌகிக முயற்சிகள் எல்லாவற்றையும் விட்டுத் தாம் முழுதுந் தேவவூழியமே செய்யப்புகுந்தருளும் சுவாமிகள் துறவுநிலையை யடையக் கருதினார்கள். "வேண்டின் உண்டாகத் துறக்க துறந்த பின், ஈண்டியற் பால பல" என்னுந் திறக்குறளை நினைந்து துறவுநிலையே நம்பெருமானுக்குத் திருத்தொண்டுகள் பலவுஞ் செய்தற்கு ஏற்ற தாகுமென் றுணர்ந்தார்கள். துறவுநிலையை யடைந்தாலும் இலௌகிகர்களுக்கு உரிய வெள்ளாடையிருந்தால், உலகத்தவர் தமது உள்ளப்பெருமை யறியாமல் 'உத்தியோகங்களில் அமர்ந்து பொருள் தேடாமல் என் இருக்கிறீர்கள்!' என்று ஓயாமல் வினவுவரென்றும், தம்மிடம் உலக விவகாரங்களைப் பேசுவரென்றும் எண்ணி விநாயகப்பெருமான் முன்னிலையில் திருஞானசம்பந்தர் திருவருளினாற் காஷாய ஆடைபெற்று அதனைத் தமது உண்மைத் துறவுநிலைக்கு அடையாளமாகத் தரிக்கலானார்கள்.

இங்கே அவசியமாகக் கவனிக்கத்தக்கது ஒன்று உண்டு. நம் சுவாமிகளுக்குப் பதினெட்டாவது வயது துவங்கிய பொழுதே சௌந்தரவல்லி என்னும் அருந்தவப் பெண்மணியார், அவர்களுக்கு

னைவியாக மணஞ் செய்விக்கப்பட்டனர். இவ்வம்மையார் சுவாமிக நக்கு ஏற்ற நற்குணங்கள் நற்செய்கைகளெல்லாம் முழுதும்பொருந் ப்பெற்றவராய் வந்து வாய்த்தமை திருவருளின் செயலேயாம். மம்மையாரும் சுவாமிகளும் மற்றையோர் போலாது மிகச் சிறந்த அன்பினுல் உடலும் உயிரும்போற் பொருந்திச் சிவபத்தி அடியார் பத்திகளில் முதிர்ந்து எப்போதும் சிவத்தொண்டிலே முதன்மை பெற்று நிற்பவர்கள். இவ்வம்மையார் தங்கணவனுர் விருப்பத் திற்குச் சிறிதும் மாறுபடாமல் நடக்கும் கற்பொழுக்கத்திற் சிறந்து, அவர்கள் செய்துவரும் சிவஞானப்பிரகாசச் செயல்களுக்கெல்லாம் ஒரு பேருதவியாய் நின்று உழைத்து வருகின்றூர். விருந்தினரை உபசரித்தலிலும், அடியார்க்குப் பணிவிடை செய்தலிலும், ஏழை எளியவர்கட்கு அறங்கள் செய்வதிலும் மிகச் சிறந்தவர்; சுவாமி களின் இல்லத்திற்குச் சென்ற பெரியோரும், கற்றோரும், அடிய வரும் எல்லாரும் இவ்வம்மையார் தங்கணவர்க்கேற்ற கற்பும் பத்தி யும் மிக்கவராய் நடக்கும் அருமையினை வியந்து பாராட்டாமற்போவ தில்லை. இவ்வம்மையார் சுவாமிகளை மணந்த பெருந்தவத்தின் பயனுகச் சைவசமயாசிரியர் நால்வர் பெயரைத் தாங்கிய திரு ஞானசம்பந்தன், மாணிக்கவாசகன், திருநாவுக்கரசு, சுந்தரமூர்த்தி என்னும் நான்கு புதல்வர்களையும், மூன்று புதல்விகளையும் ஈன்று அவர்கள் எல்லாரையும் சிவபத்தி சிவஞானங்களிற் போற்றி வளர்த்து வருகின்றூர். இவர்கள் இல்லத்திற்குச் சென்றூல் சிவபூசை மகே சுரபூசை நடத்தலும், தேவார திருவாசகம் ஓதுதலும், புராணங்கள் திநூல்கள் ஞானசாத்திரங்கள் படித்தலும் காணலாமன்றி, வீணை வேறு உலக விவகாரங்களைச் சிறிதுங் காணல் ஏலாது. சுவாமிகளும் அம்மையாரும் இவர்கள் மக்கள் எல்லாரும் திருநீறிட்டுப் பயபத்தி யோடிருந்து பூசை மாளிகையிற் றினந்தோறும் தேவார திருவாச கங்கள் இனிய ஓசையோடு ஓதுவதைக்கேட்டால் கேட்பவர் மனம் கல்லாயிருப்பினுஞ் சிவபத்தியிற் கரையும். சிவமயமாய் விளங்கும் நம் அருமை மனைவியாரையும் மக்களையும் வருந்தவிட்டுப் போதல் சிவகாருணிய வொழுக்கமே பொருளாய்க்கொண்ட சைவத் துற வொழுக்கத்திற்குச் சிறிதும் பொருந்ாதென்றும், நல்லவரான அவர் களோடு இணங்கியிருத்தலால் அவர்களெல்லாரும் சிவபத்தி சிவ ஞானங்களில் மேன்மேல் உயருவதோடு தமது தவவொழுக்கமும் செவ்வையாக நிறைவேறுமென்றும் நம் சுவாமிகள் உண்மையாக

உணர்ந்து பார்த்தே தமது இல்லற வாழ்க்கையினையே துறவற வாழ்க்கையாகத் திருப்பிக்கொண்டார்கள். இவர் மனைவி இவர் மக்கள் என்னும் உலகப்பற்றின் வசப்பட்டு ஒழுகாமல், இவர் சிவ நேசத்தின் மிக்க நல்லோர், இவரோடிருப்பது சிவபத்தியினை வளர்ப்பதற்கு ஏதுவாம் என்னும் உயர்ந்த நோக்கத்தோடு நம் சுவாமிகள் அமர்ந்திருக்கும் நிலை உண்மை யறிவிற் சிறந்த நல்லோர்க் கன்றி ஏனைப் பேதை மாக்களுக்கு ஒரு சிறிதும் விளங்காது. சிலர் தம் மனைவி ஏறுக்குமாறாய் இருந்ததுபற்றித் துறந்து ஓடிப் போவர்; சிலர் தம்மனைவி மக்களுக்குப் பொருள்தேடிக் கொடுத்து அவர்களைப் பாதுகாக்கச் சோம்பலுற்றுத் துறந்து செல்வர்; சிலர் வறுமையினால் துறப்பர்; சிலர் பிறரை வஞ்சித்துத் தாம் சுகமாய் வாழ்வதற்குத் துறப்பர்; சிலர் துறவுநிலையிற் றம்மைப் பட்டங்கட்டி வைப்பார்கட்கு அடங்கித் துறவு மேற்கொள்வர்; இங்ஙனமே துறவு நிலை மேற்கொள்ளுவதற்கு இன்னும் பல காரணங்கள் உண்டு. ஆனால் இவைகள் எல்லாம் போலித் துறவுகளே யல்லாமல் உண்மைத்துறவுகள் ஆகமாட்டா. நம் சுவாமிகள் கொண்ட துறவோ உலகப்பற்றின்றிச் சிவபத்தி சிவஞானங்களில் உறைத்து நின்ற தொன்றாகும். இவ்வளவு சிறப்புடையதான இத்துறவொழுக்கத்தின் மேன்மையைப் பட்டினத்து அடிகள் "அறந்தானியற்று மவனிலுங் கோடி அதிகம் இல்லந் துறந்தான் அவனிற் சதகோடியுள்ளத் துறவுடையோன்" என்று அருளிச் செய்தமை கொண்டு தெளிவாக அறியலாம். சிவபத்தி அடியார் பத்திகளின் மிக்க தம்மனைவி மக்களை உண்மைச் சிவநேசர்களாகக் கண்டு, அவர்களோடு சிவநேசத்தால் இணங்கியிருந்து, உலகப்பற்றின்றிச் சிவமே நினைந்திருப்பாராய், உண்மைத் துறவொழுக்கம் உடைய நாயன்மார் சரித்திரங்களைப் பெரியபுராணத்தின்கட் படித்தறிந்த பெரியோர்க்கு மாத்திரமே நம் சுவாமிகளின் துறவொழுக்க மேன்மை செவ்வையாக விளங்கும். அகத்தியர், புலத்தியர், வசிட்டர், யாஞ்ஞவற்கியர், திருவள்ளுவ நாயனார், தாயுமான சுவாமிகள் முதலிய பெருந்தவச் செல்வர்களெல்லாம் தம்மனைவிமாரோடிருந்து இல்லறமுந் துறவறமும் ஓர் அறமேயாகத் துறவு நடாத்திய அருமை பெருமைகள் அறியவல்லார்க்கே நம் சுவாமிகளின் துறவு நிலையின் உண்மை இனிது புலப்படும். நல்லோரைப் பழித்துக் கூறுதலையே பொருளாக்கொண்ட குறும்பர்க்கும், அறிவில்லாக் கயவர்க்கும் இவ்

வுண்மை புலப்படாமற் போதல் இயற்கைதானே! இக்குறும்பருங் கயவரும் தூற்றும் பழிப்புரைகளைச் சிறிதறிவுடையாரும் ஒரு பொருளாகக் கொள்ளார்.

நம் சுவாமிகளின் மனைவியார் அருந்ததியன்ன கற்பொழுக்க மும், மங்கையர்க்கரசியாரன்ன சிவபக்தியும் உடையவராதலால் அவரைவிட்டு நீங்க விரும்பினர் அல்லர். தாம் ஆண்பாலார் பலப் பலர்க்குச் சிவஞானத்தை உபதேசித்துச் சிவபத்தியினை வளரச் செய்து வருதல்போலவே, தம்மனைவியார் வாயிலாகப் பெண்பாலார் பலர்க்கும் அச்சிவபத்தி சிவஞானங்களை வளரச் செய்விக்கும் உயர்ந்த நோக்கம் பற்றியே சுவாமிகள் தம் அருமை மனைவியா ரோடு உடனிருந்து துறவு நடாத்துகின்றனர்.

இனி நம் சுவாமிகள் செல்வத்தின் மிக்க உயர் குடியிற் பிறந்து குழவிப்பருவந் தொட்டே வறுமை யின்னதென்றுந் தெரியாமல் செல்வமாய் வாழ்ந்து வருதலால், அவர்கள் வறுமைக்கு அஞ்சித் துறவு மேற்கொண்டவர்களும் அல்லர். தாம் எடுத்த சைவசித்தாந்தப் பிரகாசத்தின் பொருட்டுத் தமது சொந்தப் பொருளிலிருந்தே இரு பதினாயிரம் ரூபாவரையில் செலவு செய்திருக்கிறார்கள். இவர்களிட மிருக்கும் தமிழ், சமஸ்கிருத, ஆங்கிலப் புத்தகங்களே பதினாயிரம் ரூபா விலையுள்ளன. இவைகள் எல்லாவற்றையும் நேரே சென்று பார்த்த அறிஞர்கள் சுவாமிகளின் உலகப்பற்றில்லா நிலைமையைக் கண்டு வியப்புறுகிறார்கள். சுவாமிகள் இதுவரையில் தாம் நடத்தி வந்த நல்ல காரியங்களின் பொருட்டாகக்கூடச் செல்வர்களிடஞ் சென்று பொருளுதவி கேட்டவர்கள் அல்லர். சைவசித்தாந்தமகா சமாஜம் நடத்தி வந்த நாட்களிலுங்கூடத் தம் நண்பர்களைத் தூண்டி அவர்களே பொருள் திரட்டி அவர்களே சமாஜச் செலவுகளைச் செய்யும்படி செய்து வந்தனர்கள். நாட்டுக்கோட்டைச் செட்டிப் பிரபுக்கள் எங்கே யிருக்கிறார்கள், மற்றப்பிரபுக்கள் எங்கே யிருக் கிறார்கள், மடாதிபதிகள் எங்கே யிருக்கிறார்கள், ஜமீன்தாரர்கள் எங்கேயிருக்கிறார்கள் என்று அவர்கள் இருக்குமிடந் தேடிச்சென்று அவர்கள் தலைவாயிலிற் காத்துக் கிடந்து, அவர்களிடம் நடுக்கத் தோடுஞ் சென்று கைகட்டி வாய் புதைத்து நின்று பல்லை யிளித்து முகத்தைச் சுருக்கி மெய்யை வளைத்து, அப்பிரபுக்களிடத்தில் இல்லாத உயர் குணங்களை இருப்பனவாகப் பொய்யும் புளுகும் புனைந்து கட்டிப் பாடிய புரைக்கவிகளைக் குழறிச் சொல்லி அவர்கள்

வீசி எறியும் சில காசையுஞ் சோற்றையும் பெற்றுத் தம் பாழ்வயிறு கழுவித், தமிழ் மொழிக்கும் தமிழுணர்ந்தார்க்கும் பழிச்சொல்லை வருவித்துத் தமது வாழ் நாளை அவலமாய்க் கழிக்கும் போலிக்கவிராயர்கள் எத்தனைபேர்! போலி வித்துவான்கள் எத்தனை பேர்! போலிப் புலவர்கள் எத்தனைபேர்! இத்தகையோரால் தமிழ் நாட்டுக்கு வந்த தீமை மிகப்பெரிது! நம் சுவாமிகள் இத்தகைய போலிக்கவிகளின் கூட்டத்திற் சேர்ந்தவரல்லர். கல்வியுஞ் சிவ பத்தியும் நற்குண நற் செய்கைகளும் மிக்கவரை மதிப்பதன்றிச் செல்வம்பற்றிச் செல்வரை ஒரு பொருட்டாக எண்ணி அவரைக் கனவினும் மதிப்பவரல்லர். நம் சுவாமிகளைப் போன்ற வித்துவ சிகாமணிகள் சிற்சிலராலே தாம் தமிழுக்கும் தமிழுணர்ந்தார்க்கும் சைவத்திற்கும் மறுபடியும் நல்ல பெயரும் நன்கு மதிப்பும் வரலாயின.

இனி நம் சுவாமிகள், பிறரை வஞ்சித்துத் தாம் சுகமாய் வாழும் பொருட்டுத் துறவுமேற்கொண்டவர்களும் அல்லர். இவர்கள் இளமை தொட்டே செல்வத்திற் பிறந்து பொய்யும் புனைசுருட்டும் வஞ்சமும் இன்னவென்றே தெரியாமல் ஞானத்தில் வளர்ந்து, உயர்ந்த உத்தியோகபதவியில் அமர்ந்திருந்து, தமதுபொருளில் ஒருபெரும் பாகத்தையும் சைவப்பிரகாசத்திற்குச் செலவிட்டு, இன்னும் மிகுதியாயுள்ள பொருளைத் தமக்குந் தமது குடும்பப் பாதுகாப்பிற்கும் வைத்து, ஏதொரு குறைவுமின்றித் திருவருள் வலத்தால் இனிது வாழ்தலால் இவர்கள் மேற்கொண்ட ஒழுக்கம் உண்மை யொழுக்கமே யாவதல்லால் வஞ்ச வொழுக்கமாவது ஒரு சிறிதுமில்லை. சுவாமிகளின் அருமை மனைவியாரும் பொருட்பற்றுச் சிறிதுமின்றிச் சிவத்தொண்டிலேயே ஊன்றிநிற்பவர் என்பதற்குச் சுவாமிகள் சைவப்பிரகாசத்தின் பொருட்டுத் தமதுபொருளை ஏராளமாகச் செலவிட்டு வருதலைக்கண்டு அவர் மனம்புழுங்காமல் மகிழ்ச்சியோடு அதற்கு உடம்பாடாயிருந்து வருதலும், பொருள் வருவாய்க்கு இடமான தமது உத்தியோகத்தினின்று விலகிச் சுவாமிகள் துறவொழுக்கத்தை மேற்கொண்டபோதும், 'சிவ ஊழியமே முழுதும் செய்வதற்கு இசைந்த இவ்வுயர்ந்த நிலையைத் தாங்கள் மேற்கொண்டது நிரம்பவும் நல்லது' என்று சொல்லி அதற்கு இணங்கித் தாமும் அதற்கு உதவியாய் இருத்தலுமே சான்றாகும். இன்னும் நம் சுவாமிகள் இத்தென்னாட்டிலும் வட இந்தியாவிற் கல்கத்தா, காசி, டில்லி முதலான நகர்களிலும், இலங்கையிலும் ஓயாமற் சென்று சைவ

சித்தாந்தோபந்நியாசங்கள் செய்துவருதற்கு இசைந்து 'எப்படியாவது சிவஞானம் எங்கும் பரவினாற்போதும்' என்று மன அமைதியோடிருக்கும் அக்கறற்பிறகரசியார் தன்மையை உற்று நோக்குங்கால் அவர் உலகப்பற்றில்லாதவர் என்பது தெள்ளிதிற் புலப்படுகின்றதன்றோ? இங்ஙனமெல்லாம் சிவத்தொண்டிலேயே நிலைபெற்ற தம் அருமை மனைவியாரோடு சிவ நேயத்தால் இணங்கி ஒழுகும் நம் சுவாமிகளை வாயார வாழ்த்தும் புண்ணியமின்றி, அவர்களை வஞ்சத் துறவுடையார் என அழுக்காறு மிக்குப் புலம்பும் புல்லறிவு மிக்க பொல்லாக் கயவர் நாப்புழுத் தழிவது திண்ணம்.

இங்ஙனம் சிவத்தொண்டின் நிலை நின்ற மனைவியாரோடும் இருந்து துறவு நிலை மேற்கொண்டு ஒழுகும் முறை பண்டைக் காலத்து இருடிகளாலும் முனிவர்களாலும் அருந் தவத்தோராலும் கைக்கொள்ளப்பட்ட மிக உயர்ந்த நன்முறையாம். இது துறவறத்தின் வழுவாது ஒழுகித் தமக்கும் பிறர்க்கும் பயன்பட்டு இறுதியில் இறைவன் திருவருட்பேரின்பத்தைப் பெறுதற்கும் இயைந்த தொன்றாகும். இந்த நன் முறையைக் கைவிட்டு, எல்லாரையும் எல்லாவற்றையும் துறந்து வந்தோமெனச் சொல்லிப் போலித் துறவிற் சென்றவர்கள் சிலநாட்களில் எல்லாம் தீய எண்ணங்கள் கிளைக்கப் பெற்றவர்களாகி, ஊரிலுள்ளார் மனைவிமார்களை வலிந்து சென்று கற்பழிக்க முயன்று அதிற் சித்திபெற்றாற் பழியினைச் சுமந்தும், சித்தி பெறாவிடிற் கொலை முதலான கொடிய பாவங்களைச் செய்தும், இவற்றின் பொருட்டு ஏராளமான திரவியங்களைச் செலவு செய்தும், பிறர்பொருளைக் கவர்ந்தும், கள் சாராயம் இறைச்சி முதலியன உண்டு தம் உடம்பைக் கொழுப்பேற வைத்தும் தமக்கும் பிறர்க்கும் பெரிய தீங்குகளை விளைவித்து வருகின்றார். இவர்களுடைய கூடாவொழுக்கங்களைத் தெரிந்து வைத்தும் இவர்களைத் திருத்த முயலாமல், இவர்கள் இயற்றும் தீய வொழுக்கங்களுக்குத் தாமும் உதவியாய் நின்று பொருள் பறித்து உண்டும், பிறர் முன்னிலையில் இவர்களைப் புகழ்ந்து கவிபாடி வணங்கியும் தீய செயல்களையே தம் பிறவிப் பயனாய்க் கொண்ட பொல்லாத பொய்க் கவிராயர்கள் மலிந்தமையாலன்றோ நஞ்செந்தமிழ்ச் சைவத் திருநாடு தன் பெருமை யிழந்தது! உண்மைத் துறவொழுக்கத்தில் தலைநின்ற நம் சுவாமிகளால் நம் தென்னாடு தன் பெருமை விளங்கப் பெற்று வரவே, இனித் தம் தீய

செயல்கள் பலிக்கமாட்டாவென்று கண்ட பொய்க் கவிஞர்கள் நம் சுவாமிகளைக் குறைகூறியாவது தமது கருத்தை நிறைவேற்றப் பார்க்கிறார்கள். திருவருள் இனி இத்தீயவரைத் தண்டியாமல் விடாது. இன்னும் இத்தகைய வஞ்சப் பொய்யரான போலிக் கவிராயர், போலிப்புலவர், போலிப் பாவலரால் அறிவு மயக்கப்பட்டுப் பரத்தையரை மருவிக் கெட்ட பிரபுக்கள் பலரென்றும், பலர் பல கூறப் பேசக்கேட்டு மிக வருந்தினேம். ஈழக்குலச் சான்றாருக்குக் குருக்கள்மாராய் இருந்து அவர்களை எய்த்துப் பெற்ற பொருள் தமது சாராயக் குடிக்கும் காமப்பரத்தைக்கும் போதாமையால் அத் தொழிலை விட்டுச் சைவ வேளாளப் பெயர்புனைந்து பிரபுக்கள், ஜமீன்தார்கள் முதலியோரிட மெல்லாம் சென்று தமது வஞ்சப் புகழ்ச்சி யுரைகளாலும், பரத்தையர்க்குத் தூதுபோய் வருதலாலும் அவரை வசஞ்செய்து, அவர்பாற் கவர்ந்த பொருளையெல்லாம் தமது சாராயக் குடிக்கும் காமக் கிழத்திக்கும் அழிக்கும் போலிக் கவிராயரும் போலி வித்துவான்களும் சிற்சிலர் ஆங்காங்குத் தோன்றி, நம் சுவாமிகள் செய்து போதரும் தரும உபதேசங்களைப் பல்லாயிரவர் மிக்க விருப்பத்தோடுங் கேட்டுத் தருமமார்க்கத்திற் செல்லுதலை அறிந்து, இனித் தமது தீய ஒழுக்கத்தாற் பொருள் கவரவலா தென்று எண்ணி, நம் சுவாமிகளைப் பலவாறு புறங்கூறத் தலைப்பட்டிருக்கிறார்கள் என்பது கேட்டு மிக வருந்தினேம். தம் தந்தையும் தமக்குச் சகோதரர் முதலாயினரும் உயிரோடிருக்கையில், அவர்கள் இறந்துபோயினார்கள் ; அவர்களுக்குக் கருமஞ் செய்தற்குப் பொருள் இல்லை ; பொருள் உதவி செய்யவேண்டும் என்று பிரபுக்கள் பலரிடம்போய்ப் பொருள் திரட்டிக்கொண்டு ஓர் ஊரை விட்டு மற்றோர் ஊருக்கு ஓடின மோசக் கவிராயர் சிலர், நம் சுவாமிகள் இடைவிடாது செய்து வரும் ஞானோபதேசங்களாலே எல்லாரும் மெய்யறிவு விளங்கப்பெற்றுப், பொல்லாத புல்லரான பொய்க்கவிஞரின் சொல்லில் மயங்காமல் நல்வழியிற் செல்லுதலைப் பார்த்து, ‘ இனி என்செய்வோம் ! வேதாசலனார் செய்யும் உபதேசங்களால் சனங்கள் விழித்துக்கொண்டார்களே ! இனி நம் மோசச் சொற்களுக்கு வசமாக மாட்டார்களே ! ஆகையால் வேதாசலனாரை எங்கும் பழித்துப் பேசுவதும், பொய்யும் புளுகுங்கட்டி எழுதுவதுஞ் செய்து அவருக்கு நல்ல பெயர் இல்லாமற் செய்து விட்டால், நாம் எல்லாரையும் ஏமாற்றி நன்றாகப் பொருள் பறிக்கலாம் ’ என்று எண்ணி

நம் சுவாமிகளைப் பலவாறு புறங்கூறி வருகின்றனர் என்பது கேட்டு மிகவும் வருத்தமுற்றேம்.

இனிச் சிவபுண்ணிய சீலர்களான நாட்டுக் கோட்டைச் செட்டிப்பிரபுக்கள் இலட்சக் கணக்கான திரவியங்களைப் புண்ணிய காரியங்கள் பலவற்றிற்கு உபயோகப்படுத்தி வரும் விசேஷங்களை நன்கு உணர்ந்த சுவாமிகள், இக்காலத்திற்கு அவசியமாக வேண்டப்படும் சைவசித்தாந்தப் பிரகாசத்திற்கும், தமிழ்க் கல்வி விருத்திக்கும் அவர்கள் தமது திரவியத்தைப் பெரும்பாலும் பயன்படுத்துவார்களாயின் நாடெல்லாம் மிகவுஞ் சிறந்த நன்மைகளை அடையும் என்று நினைத்து, அவர்களை இவ்வகையான விசேஷ தருமங்களிற் செலுத்தும் பொருட்டு ஓர் அருமையான விஷயம் எழுதி அதனைத் தமது ஞானசாகரப் பத்திரிகையில் நான்கு வருஷங்களுக்குமுன் வெளியிடுவித்தார்கள். அவ்விஷயத்தை அப்போது படித்துப் பார்த்துச் சும்மா இருந்த போலி அறிவினர் சிலர் இப்போது அதே விஷயம் 'வைசியமித்திரனில்' வரப்பார்த்து, இதுவே காரணமாக நம் சுவாமிகளைத் தமக்குத் தோன்றியபடியெல்லாம் பழித்துக் கூறத் தலைப்பட்டார். நாட்டுக்கோட்டையார் தருமங்களைச் சமயஞான சாஸ்திரஞான விருத்திக்கும், தமிழ்க் கல்வி விருத்திக்கும் திருப்பும் நல்நோக்கத்தோடு நம் சுவாமிகளைப் போலவே விஷயங்கள் எழுதினோர் இன்னும் பலர் உண்டு. அவர்களையெல்லாம் பழித்துக் கூறாமல் நம் சுவாமிகளை இப்போது இவர்கள் பழிக்கத் தலைப்பட்டதற்கு மற்றொரு காரணமும் புலப்படுகின்றது. நம் சுவாமிகள் சென்ற பதினாறு பதினேழு வருஷங்களாகச் சைவத்திற்கும் தமிழுக்கும் செய்துவரும் உபகார முயற்சிகள் இனி எக்காலத்தும் தொடர்பாக நடந்தேறும்பொருட்டுச் 'சமரச சன்மார்க்க நிலையம்' என்னும் திருக்கழகம் ஸ்தாபித்து அதன் முயற்சியை வலுப்படுத்தி வருகின்றார்கள். இங்ஙனம் சுவாமிகள் சிறிதும் தந்நலம் கருதாது பிறர்நலங் கருதியே நீண்டகாலமாக அரியபெரிய காரியங்கள் செய்து வருதலைப் பார்த்து வந்த கல்வியறிவு மிக்க செல்வர்கள், நம் சுவாமிகள் எடுத்த முயற்சி செவ்வையாக நடந்தேறும்பொருட்டுத் திரிகரணங்களாலும் சகாயஞ் செய்ய விரும்பியதோடு திரவிய சகாயமும் மிகுதியாகச் செய்ய முன்வந்திருக்கின்றார்கள். இதனைக்கண்ட போலிக் கவிராயரும் போலி வித்துவான்களும் வயிறு எரிந்து 'ஐயோ, யாது செய்வோம்! வேதாசலனார் செய்துவரும் முயற்சி நிலையாக வேர் ஊன்

றும் போலிருக்கிறதே! இவரது முயற்சி நிலையாகுமாகுல் நம்முடைய செல்வாக்குப் போய்விடுமே' என்று தலையில் அடித்துக் கொண்டு 'நாட்டுக்கோட்டையார் தருமங்களை இவர் இகழுகிருர்' என்று இவரை நன்ருக வசைப் பத்திரிகைகளில் எழுதி வெளிப்படுத்தி ஆரவாரஞ் செய்வோமாயின், சொல்லுவார் சொற்களைக் கேட்டு நம்பிவிடும் கபடமே சிறிது மறியாத செட்டிப்பிரபுக்களிற் பலர் இவருக்கு ஏதுஞ் சகாயஞ் செய்யமாட்டார்கள்; அவர்களுக்குச் சார்பாக நாம் எழுதினமையால் நமக்கே சகாயஞ் செய்வார்கள்; நாம் அவர்களிடம் எப்போதும்போல நன்ருகப் பணம் பிடுங்கிப் பிழைக்கலாம்' என்னுங் கருத்தோடு நம் சுவாமிகளைப் புறம்பழிக்க முன்வந்திருக்கிருர்க ளென்று நமக்கு உண்மை புலப்படுகின்றது.

இனி நம் சுவாமிகள், வஞ்சப் போலிக் கவிகளைப் போலச், செட்டிப் பிரபுக்களிடமாவது மற்றப் பிரபுக்களிடமாவது தமக்குப் பொருள் வேண்டும் என்று இதுவரையிற் சென்றவர் அல்லர்; தமது பொருளையே ஏராளமாகச் செலவு செய்து சைவசித்தாந்தத்தை வளர்த்துவரும் நம் சுவாமிகள் தமக்கு அவர்கள் திரவிய சகாயம் செய்யாதது பற்றி அவர்களை இகழ்வதாகப் பேதை மாக்கள் சிலர் சொல்வராயின் அவர் பதரான சொற்களை அறிஞர் எவரேனும் நம்புவரா? நம்பார்! நம்பார்!! நாட்டுக்கோட்டையார் தருமங்களை இன்னும் விசேஷமாகப் பயன்படுத்தும் பொருட்டே சுவாமிகள் அவ்விஷயம் எழுதினுர்கள். சிவபெருமானுக்கு ஆலயங்கள் எடுப்பிப்பதும், பழுதாய்ப்போன ஆலயங்களைப் புதுக்குவிப்பதும் விசேஷ சிவபுண்ணியங்களாம் என்பதனைச் சுவாமிகள் உணராதார் அல்லர். சிவாலய வழிபாடு செய்யவேண்டுவது எத்திறத்தவர்க்கும் அவசியமாமென்றும், சிவாலயங்கள் நல்ல நிலைமையிலிருப்பது உலகத்திற்கு மிகுந்த நன்மையைப் பயக்கும் என்றும் நம் சுவாமிகள் நூற்றுக் கணக்கான பிரசங்கங்கள் செய்திருப்பதோடு, ஞானசாகரப் பத்திரிகையிலும் விரித்தெழுதியிருக்கிருர்கள். அங்ஙனம் இருக்க, 'முழுப் பூசனிக்காயையும் சோற்றில் மறைப்பதுபோல' நம் சுவாமிகள் சிவாலய வழிபாட்டையும் சிவாலயத்திருப்பணியையும் இகழுவதாகப் பொய்யும் புளுகுங்கட்டி அவர்களை இகழுந் தீயோர் திறம் கொடிது! கொடிது!! வலுவாகக் கட்டப்பட்டு விளங்கும் பழமையான சிவாலயங்களை மூலஸ்தானம் முதல் தரைமட்டமாக இடித்துப் பிறகு இலட்சக்கணக்கான பொருளைச் செலவழித்துக் கட்டினுலும், திருஞான

சம்பந்த சுவாமிகள் முதலான சமயாசிரியர் தரிசிக்கச் சென்றமை யால் சிவம் சாநித்தியமாய் விளங்கி நின்று அவர்களுக்கு அனுக்கிர கித்த தாணுலிங்கங்களைக் கல்லிப்பெயர்த்து எடுத்துப் பிறகு ஸ்தா பிப்பதால் அவற்றினிடத்திலே சிவசாநித்தியம் குறையும் என்றும், அவ்வாறு மூலஸ்தானம் வரையில் பழைய ஆலயங்களைப் பிரித்தெடுத் துக்கட்டுவதற்கு அவைகள் அவ்வளவு பழுசாகப் போவதில்லையென் றும், பழுதாய்ப்போன சிற்சில இடங்களை மாத்திரம் பழுது பார்ப் பதை விடுத்து இலட்சக் கணக்கான தொகைகளை இடித்துக் கட்டு வதிற் செலவிட்டு இக்காலத்திற்கு அவசியமான சிவஞானப்பிரகாசத் திற்கும் தமிழ்க்கல்வி விருத்திக்கும் சொற்ப உதவி மாத்திரம் செய் தல் போதாதென்றும் தெரிவித்து அத்தருமங்களை இன்னும் விசே ஷப்படுத்திச் செய்வதற்கு வழிகளுங் காட்டிய நம் சுவாமிகளின் புண்ணிய நோக்கத்தை அறியாமல் அவர்களைப் பலவாறு இகழ்வது பெரும் பாவமாய் முதிர்ந்து இகழ்வார்க்கு விரைவிலேயே தன் பயனைத் தரும்.

இனி நாட்டுக்கோட்டையார் தருமங்களை இகழ்ந்து பேசினால் அவர்கள் தமக்குப் பொருளுதவி செய்வார்கள் என்று எண்ணி நம் சுவாமிகள் அங்ஙனம் அவ்விஷயம் எழுதினதாகச் சொல்லும் புலவ ரின் பொய்யறிவின் திறத்தை என் என்பேம்! ஒருவரிடம் பொரு ளுதவி வேண்டினோர் அவர்பாற் குற்றங் குறைகள் இருப்பினும் அவற்றை எடுத்துச் சொல்லாமல், அவரையும் அவர் செய்யுங் காரியங் களையும் புகழ்ந்து பேசியன்றோ அவ்வுதவியைப் பெறுவர்? செல் வரைப் புகழ்ந்து இச்சகம் பேசுதலை யல்லாமல் வேறு புண்ணியம் ஒன்றும் அறியமாட்டாத போலிக் கவிராயருக்கும் போலிப்புலவருக் கும் இது தெரிந்ததுதானே? நம் சுவாமிகள் அங்ஙனம் அவரிடம் பொருளுதவி பெறுங் கருத்து உடையவர்களாயின் அவர்களுக்கு உண்மையை இடித்துச் சொல்ல முன்வருவார்களா? நம் சுவாமிகள் பிறந்ததுமுதற் செல்வம் உடையவராய், இன்றும் பிறரை எதிர்பாரா மல் வாழ்வதற்கு வேண்டிய அளவு திரவியப்பே றுள்ளவர்களாய் இருத்தலால் அவர்கள் பிறரிடம் தமக்காகப் பொருள்வேண்டிச் சென்றதே இல்லை. அல்லது பொருள் மிகுதியாகச் சேர்க்கும் விருப்பம் உள்ளவர்களாயின் எளிதாகப் பொருள் தேடுதற்குரிய இலௌகிக முயற்சிகளும், அவற்றிற்கு ஏற்ற கல்வி அறிவு ஆற்றல் களும் தமக்கு மிகுதியாக இருந்தும் அவற்றையெல்லாம் முற்றும்

விட்டு நம் சுவாமிகள் சைவசித்தாந்தத்திற்கே உழைக்க முன் வருவார்களா? இது வரையில் சுவாமிகள் தமது பொருளையே சிவத்தொண்டின் பொருட்டு ஏராளமாகச் செலவிட்டிருப்பதனை இத்தென்னாடெங்கும் உள்ள நல்லோர்கள் செவ்வையாக உணர்ந்திருத்தலால், இவ்வுண்மையை மறைத்துப் புறங்கூறும் கயவர் உரையைக் கண்டு அறிஞர் சிறிதும் மயங்கார். நம் சுவாமிகள் பிறர் பொருளுதவியையேனும் பிறர் தயவையேனும் எதிர்பார்த்து நடவாதபடி திருவருள் அவர்களை எவ்வகையானும் உயர்ந்த நிலையில் வைத்திருத்தலால், அவர்கள் நடுவுநிலை பிறழாமல் இருந்து உண்மையைத் தைரியமாக எடுத்துச் சொல்லி உலகத்திற்குப் பெரியதோர் உபகாரம்புரிந்து வருகிறார்கள். உலக நன்மையையே நாடி உண்மையை உள்ளவாறே எடுத்துச் சொல்லும் பெரியோர்கள் மிகச் சிலரேயாவர். அத்தகைய பெரியோர் சொற்களைக் கேட்டு நடப்போமாயின் நமக்கு இம்மைக்கும் மறுமைக்கும் அழியாப்புகழும் புண்ணியமும் உண்டாகும். பிரபுக்களே! அவ்வாறின்றி நீங்கள் விரும்பியவற்றையே புகழ்ந்து பேசி உங்களை ஏமாற்றி உங்களிடம் உள்ளவற்றைக் கவர்ந்துகொண்டு போய்ப் பழிக்கும் பாவத்திற்கும் அழிக்கும் வஞ்சகர் சொற்கள் முகத்தெதிரே இனியவைபோற் றோன்றினும், அப்புறம் அவைகள் நஞ்சைப்போல் அளவிறந்த தீமைகளை உண்டுபண்ணும். இத்தென்னாட்டில் இப்போது மலிந்து உள்ள போலிக் கவிஞர்கள் போலிப் புலவர்கள் போலி வித்துவான்கள் இதுவரையில் ஏதேனும் ஓர் அரிய பெரிய காரியம் செய்திருக்கிறார்களா? ஒன்றும் இல்லையே. நம் சுவாமிகள் 'சைவசித்தாந்த மகாசமாஜம்' முதலிய பெருஞ்சபைகளையும், 'ஞானசாகரம்' முதலான பத்திரிகைகளையும் நடத்திவருவதைப் பார்த்துப் போலிவித்துவான்கள் சிலரும் போலிக் கவிஞர் சிலரும் தாமும் ஏதேதோ நடத்துவதுபோல் ஆரவாரஞ் செய்தும், அவர்கள் அவற்றை நல்லெண்ணத்தோடு செய்யாமையால் அவையெல்லாம் வெறுங் குழறுபடையாய் முடிகின்றன. இப்போலிக் கவிஞர், கள்ளம் அறியாப் பிரபுக்களை அணுகி அவர்கள் முகத்தெதிரே இச்சகம்பேசி வஞ்சித்தலைக் காணும் அறிஞர்க்கு நகைப்பும் இரக்கமும் உண்டாகாமற் போவதில்லை. ஒருகால் ஒரு பிரபு தம்மிடம் இருந்த ஒரு கவிராயரை நோக்கி 'ஓய் கவியே, கத்தரிக்காய் எவ்வளவு உருசியானபொருள்! பாரும்' என்று சொல்ல, 'ஆம், மகாப் பிரபுவே, அதனாலேதான் கடவுள் அதனை அவ்வளவு அழகாய்ப்

படைத்திருக்கிறார்; பாருங்கள்! உருண்டு திரண்டு வழுவழுப்பாய் எவ்வளவு வடிவாய் இருக்கின்றது; இதன் உருசி அமிர்தத்திற்குச் சமமாகும்' என்று கவிராயர் விடை கூறினர். அதனைக்கேட்ட பிரபு கவிராயரை மிக மெச்சி நாடோறுங் கத்தரிக்காய் தின்றவர, அதனாலே அவர்க்கு உடம்பெல்லாம் சொரிசிரங்கு உண்டாயின; அதன் மேல் அப்பிரபு கவிராயரை நோக்கி 'ஓய் கவியே, கத்தரிக் காய் மிகவுங் கெட்ட கறியாய் இருக்கிறது' என்ன, அதற்குக் கவிராயர் 'ஆம், ஆம்! மகாராசாவே, அதனாலேதான் கடவுள் அதன் தலையிலே ஆணி வைத்து அடித்திருக்கிறார்' என்று அதன் காம் பைத் தொட்டு விடை சொன்னார். அதன்மேற் பிரபு 'கவிராயரே, நன்றாய்ச் சொன்னீர்; கத்தரிக்காய் தின்றதனால் வந்த இந்தச் சூட் டைத் தணிக்கக் கொஞ்சம் பனங்கள்ளும் சிறிது பனங்கற்கண்டும் சேர்த்துச் சாப்பிடலாமா?' என்று கேட்க, உடனே கவிராயர் 'அதைத்தான் நானும் சொல்லலாம் என்று நினைத்தேன். நுண் ணறிவு மிகுந்த மகாப்பிரபுவாக இருப்பதனால் தங்கள் திருவாக்கி லேயே அது வந்து விட்டது' என்று அதற்கு ஒத்து ஊதினர். சிறிது தாமதித்துப் பிரபு 'கவிராயரே, ஆனாலும், கள்ளுக்குடிக்கிறது பாபம் என்கிறார்களே, நீர் என்ன சொல்லுகிறீர்?' என்று கேட்கக், கவி, 'மருந்தாக உபயோகிப்பதனாற் குற்றமில்லை.' என்றார். அப்பே தைப் பிரபு கவிராயர் சொல்லுக்கு மகிழ்ந்து உடனே பனங்கள்ளை வரவழைத்து முதலிற் சிறிது குடித்து, அதனால் தமது விருப்பம் அடங்காமையால் பின்னுங் கொஞ்சம் குடிக்க, இங்ஙனமே பின் னும் பின்னுங் குடிக்க, அதன்மேல் அவருக்கு வயிற்றில் ஓர் எரிவு எடுக்க அவர் கவிராயரைப் பார்த்துக் 'கவிராயரே, கள்ளுக்குடித்த வுடனே வயிற்றில் எரிவு உண்டாகிறது. கள்ளுக்குடிக்கிறவர்கள் அதற்கு அனுபானமாக இறைச்சி தின்னவேண்டு மென்கிறார்களே; அது மெய்தான்போ லிருக்கிறது' என்னக், கவி, 'ஆமாம், பிரபு, ஏதேனும் மஸ்தானபொருள் கூடச் சேர்க்கத்தான் வேண்டும்;' என்றார். அதற்குப் பிரபு 'அப்படியானால் ஓர் உயிரைக் கொன்று எடுக்கும் இறைச்சியைத் தின்பது பாவம் என்கிறார்களே' என்னக், கவி 'மகாமேதாவியாகிய தாங்கள் என்ன அப்படிச் சொல்லுகிறீர் களே. உங்கள் ஒருவருக்காகவா ஆட்டைக் கொல்லுகிறான்? மேலுங், கொன்றாற் பாவம் தின்றாற் போச்சு. ஆகையாற் குற்ற மில்லை, சும்மா தின்னலாம்' என்றார். அதன்மேல் அப்பிரபு சைவ

ராய் இருந்தும் கவி சொல்லைக் கேட்டு இறைச்சியை வருவித்து வேண்டுமட்டும் புசித்து, மதுக்களிப்பும் மஸ்தும் மிகப்பெற்றவராகிக் கவிராயரை நோக்கிக், 'கவிராயரே, நீர் மிகவும் நல்லவர், இப்போது எனக்கு மிகவும் உற்சாகமாக இருக்கிறது; சிறிது நேரம் சீட்டு விளையாடலாமா?' என்னக் கவி 'எனக்கும் அதுதான் எண்ணமாயிருந்தது; இதோ சீட்டுக் கட்டு' என்று தமது சட்டைப் பையிலிருந்து அதனை எடுத்து மேசையின் மேற்பரப்ப இருவருஞ் சூது விளையாடத்தொடங்கினார்கள்; தொடங்கி ஆடிவருகையில் பிரபுவுக்கு இத்தீய பொருள்களின் சேர்க்கையால் காம இச்சை எழ, நடுவிலே கவியை நோக்கிக், 'கவிராயரே, நீர் நல்லவர், நமக்கு மிகவும் அந்தரங்கமான நேசராக இருக்கின்றீர். நமக்கு நெடுநாளாக ஒரு தாசி மேல் இச்சை இருக்கின்றது; அந்த இச்சையை நிறைவேற்றி வைப்பீராயின் உம்மைப்பற்றி நமக்கு எப்போதும் ஞாபகம் இருக்கும்' என்று சொல்லக், கவி தம் கருத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு இதுதான் சமயம் என்பது உணர்ந்து 'கற்பகத் தருவைப் போன்ற கரங்களும், காமனைப் போன்ற அழகும், இந்திரனைப் போன்ற செல்வமும், ஆதிசேஷனைப்போன்ற கல்வியும் உடைய கோவே, தங்கள் கடைக்கண் நோக்கத்திற்குப் பாத்திரமாக என்ன புண்ணியஞ் செய்தேன்! தங்கள் விருப்பத்திற்கு மாறாய் நடப்பவன் அல்லேன். அடியேனுக்குக் கடன்காரர் இம்சை பொறுக்க முடியவில்லை. இதைத் தங்களுக்கு விண்ணப்பித்துக்கொண்டேன்' என்னப் பிரபு 'கடன் எவ்வளவு இருக்கிறது?' என்று கேட்க, அவர் 'ஐயாயிரம் ரூபா இருக்கிறது' என்றார். உடனே பிரபு அந்தக் கவிக்கு அத்தொகையைக் கொடுத்துத் தமது இச்சையை நிறைவேற்றும்படி சொல்லக், கவி 'தாங்கள் குறிப்பிட்ட அத்தாசி தேவரம்பையையும், இரதியையும் ஒத்தவள்; அவள் இதற்கு இணங்குவது கஷ்டம்; அவள் சங்கீதத்தினாலேயே திரண்ட பொருள் சம்பாதித்துவிட்டாள்; அவள் இஷ்டப்படியெல்லாம் தாங்கள் நடந்துகொள்ளக்கூடுமானால் நான் அவள் காலில் விழுந்து கெஞ்சிக் கேட்டாயினும் சரிப்படுத்தி வைக்கிறேன்' என்று சொல்லப், பிரபு அதற்கு இசைந்தார். உடனே கவி அத்தாசியிடம் போய் 'உனக்கு நல்லகாலம் வந்தது; நீ ஏன் இவ்வளவு வறுமைப்பட்டுக்கொண்டு கிடக்கின்றாய்? நம்மிடத்தில் ஒரு தக்க செல்வமுடைய பேயன் அகப்பட்டிருக்கின்றான்; என்ன சொல்லுகிறாய்?' என்று அதி

காரத்தோடுங் கேட்க, நல்ல அழகு உடையவளாயினும் ஏழையான அவள் 'தாங்கள் என்ன சொன்னாலுங் கேட்கிறேன்' என்று சொல்லக், கவி 'மாதம் ஒன்றுக்கு இருபது அல்லது முப்பதினாயிரம் ரூபாய்க்கு உனக்கு வரும்படி செய்விக்கிறேன்; ஆனால் உனது வரும்படியில் முக்காற்பங்கு எனக்கும் காற்பங்கு உனக்குமாகச் சேர வேண்டும்; அதற்கு இணங்கினால் சொல்' என்னத் தொகுப்பாக ரூபாயைப் பார்த்தறியாத அவள் தனக்குக் காற்பங்கானாலும் ஏராளமான பொருள் வருவதை நினைத்து உடன்பட்டாள். அவளை அக் கவி அப்பிரபுவினிடம் கூட்டிவைத்து, அவள் வழியாக அவர் பொருள் முழுமையுங் கவர்ந்து, அவரை வறியராக்கி நோய்கொண்டு இறக்கச்செய்து, அவர் பெண்டு பிள்ளைகளைத் தெருவில் அலைய விட்டார். இங்ஙனம் பிரபுக்கள் முகத்தெதிரே இச்சகம் பேசி அவர்களைக் கெடுக்கும் போலிக் கவிராயர் சொற்களின் வசப்பட்டு மயங்குதலால் வருந் தீங்கினைச் சிறிது அறிவுடையாரும் நன்கு உணர்வாராதலால், அன்னார் தீய செயலைக்கண்டு அவர்க்கு மிக இரங்குவர். ஆகையால், நன்மை அடைதற்கு விரும்பும் அன்பர்களே! பிரபுக்களே! இவர்களைப்போல இச்சகம் பேசும் கொச்சை வழக்கம் இன்றி, எல்லாரையும் பெரும்பயன் பெறுவிக்கும் நல்நோக்கத்தோடு நம் சுவாமிகள் உண்மையை உள்ளபடியே எடுத்து இடித்துச் சொல்லும் உறுதி மொழிகளின் பயனை உணர்ந்து இம்மை மறுமைக்கு அழியாப்புகழ் புண்ணியங்களை அடையுங்கள்!

தருமஞ் செய்வது விசேஷந்தான்; ஆனாலும், அத்தருமத்தைக் கால இயற்கையும், அது மனிதர்க்குப் பயன்படும் கூறுபாடும் பார்த்துச் செய்தால் அளவிறந்த பயனைத்தரும். கோயில்கள் கட்டுவதற்கும், அவற்றைப் புதுக்குவதற்கும் பொருளைச் செலவிடுவது சிறந்த புண்ணியமே என்பதில் தடையில்லை; அங்ஙனம் செய்யவேண்டாமென்றும், அது புண்ணியகாரியம் அன்று என்றும் நம் சுவாமிகள் ஒருபோதுஞ் சொன்னதே யில்லை. ஆனால் கோடிக்கணக்கான பணத்தை இக்காலத்தில் அங்ஙனம் அளவு கடந்து செய்வதற்கு அவசியம் உண்டா என்பதையும், இக்காலத்திற்கு அங்ஙனங் கோடிக்கணக்காகப் பணஞ்செலவிட்டுச் செய்யவேண்டிய அவசியமான தருமங்கள் எவ்வெவை என்பதையும் சிறிது ஆராய்ந்து பார்த்தால் நம் சுவாமிகள் நாட்டுக்கோட்டையார் தருமங்களைப்பற்றி எழுதிய விஷயத்

தின் உண்மை நன்கு புலப்படும். பண்டைக்காலத்து அரசர்களா லும் ஆன்றோர்களாலும் மிகவும் வலுவாகக் கட்டப்பட்ட எண்ணி றந்த சிவாலயங்கள் இத்தென்னுடு எங்கணும் இருக்கின்றன ; அவ் வாலயங்கள் பெரும்பாலனவற்றிற்கு மானியங்களாக விடப்பட்ட சொத்துக்களும் ஏராளமாயிருக்கின்றன ; வருடந்தோறும் நடக்கும் திருவிழாக்காலங்களிலும் மற்றக் காலங்களிலும் தொழுவரும் ஏராள மான சனங்கள் செலுத்துங் காணிக்கைகளினுல் அக்கோயில்கள் பெரும்பாலனவற்றிற்கு ஏராளமான வரும்படிகள் இருக்கின்றன ; இவற்றோடு நம் காருண்ணிய ஆங்கில துரைத்தனத்தார் அவ்வாலயங் கள் பலவற்றிற்கு வருடந்தோறும் செலுத்தும் மோகினிப் பணமும் உண்டு. இங்ஙனம் பலவழியானும் வந்து குவியும் திரவியங்களைக் கொண்டே அவ்வாலயங்கள் பழுதுபட்டால் அவற்றைப் புதுப் பித்துவிடலாம் ; ஒரோவொருகால் அவ்வரும்படிப் பொருள்கள் பழுதுபார்ப்பதற்குப் போதாவிட்டால், போதும் அளவுக்குத் திர விய சகாயஞ் செய்தால் அதுவே அமையும். அங்ஙனம் இருக்க, மிகுந்த வரும்படியோடு நல்ல வலுவான கருங்கற் கட்டிடமும் அமைந்த பழைய சிவாலயங்களை மூலஸ்தானம்வரையில் தரைமட்ட மாக இடித்துத் திரும்பவும் ஏராளமான திரவியத்தைச் செலவு செய்து கட்டும்படி எந்தச் சாஸ்திரம் விதிக்கின்றது ? சிவாலயங் கள் புதியவாய் எடுப்பித்தலும், பழைய ஆலயங்களிற் பழுதாய்ப் போன இடங்களைப் பழுது பார்ப்பித்தலும் சிவபுண்ணியம் என்று சாஸ்திரங்கள் பகர்ந்தனவே அல்லாமல், நன்றாயிருக்கும் ஆலயங் களை மூலஸ்தானம்வரையில் இடித்துத் தரைமட்டமாக்கித், தேவர்க ளாலும் பெருந்தவத்தோராலும் ஸ்தாபிக்கப்பட்ட சிவலிங்கப் பெரு மானை வேரோடுங் கல்லிப் பெயர்த்து வைத்துச் சாநித்தியத்தைக் குறைக்கும்படி அச்சாஸ்திரங்களேனும் சிவாகமங்களேனுஞ் எங்கே னுஞ் சொல்லியிருக்கின்றனவா ? ஒரு சிறிதும் இல்லையே? 'குளிக் கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொள்வது' போலப் புண்ணியத்தைச் செய்யப்போய்ப் பாவத்தைச் சம்பாதிப்பதாகவன்றோ முடியும்! மேலும், இருபத்தெட்டுச் சிவாகமங்களும் அச்சிவாகமங்களை ஆராய்ந் தறிந்த புனிதர்களும் நிரம்பியிருந்த பழைய காலங்களில் அச்சிவா கம விதிப்படி கட்டப்பட்ட ஆலயங்களை முழுதும் இடித்துவிட்டுக் கட்டுவதென்றால், அவ்வாகமங்கள் முழுதும் அகப்படாததோடு அவ் வாகமங்களை முற்றும் உணர்ந்தவர்களும் இல்லாத இந்தக் காலத்தில்

அவ் ஆலயக்கட்டிட அமைப்புகள் பலவகையான குற்றங்களும் உடையனவாய் உலகத்திற்குப் பலவகையான தீங்குகளையும் விளைவித்தற்குக் காரணமாய் முடியும். ஆகவே பழமையான சிவாலயங்களை முழுதும் இடித்துக் கட்டுவது அவசியமில்லாமையோடு, பல குற்றங்களையும் பல பாவங்களையுந் தருதற்கும் ஏதுவாதல் தெற்றென விளங்கும். பாருங்கள்! மிக வலுவாகக் கட்டப்பட்டு எத்தனையோ ஆயிர வருடங்களாகச் சிவசாந்நித்தியத்தோடு விளங்கும் இராமேசுரப்பெருமான் திருவாலயத்தை முழுதும் இடித்துக் கட்டப்போகிறார்களாம்; இதற்கு ஐம்பது இலட்சம் ரூபாய்க்கு மேற் செலவாகப் போகிறதாம்! இவ்வாலயம் மிகவும் வலுவாய் இருத்தலின் இதனை இடித்துக் கட்டலாகாது என்று நங்காருணிய துரைத்தனத்தார் இரண்டுமுறை மறுத்தும், அச்சொல்லைக் கேளாமல் அதனை இடித்துக் கட்டத் தலைப்பட்டுவிட்டார்கள் என்று கேட்டு மிகவும் துயரம் உறுகின்றோம். இங்ஙனம் இதனை இடித்து ஏராளமான செலவு செய்வதற்கு அவசியம் யாது நேர்ந்ததோ! அறிவுடையீர் சொல்லுமின்! அறிவுடையீர், நீங்கள் நல்லெண்ணத்தோடு, ஒருவர் செய்யுந் தருமத்தை, விவரம் அறிந்து பாவமில்லாமல் இக்காலத்திற்கு அவசியமான புண்ணிய வழிகளில் உபயோகப்படுத்தும்படி சொல்வீர்களானால், உங்கள் சொல் அவர்கள் காதில் ஏறாமற் போவதோடு, அவர்கள் செய்யுந் தருமத்தை நீங்கள் இகழுவதாகவுங் கருதப்படுகிறீர்கள்! ஈதென்ன கொடுமை! தாம் பிடுங்கித் தின்னும் பிரபுக்கள் என்ன குற்றம் செய்தாலும் அவர்களைத் திருத்தி நல்வழிப்படுத்த நினையாமல், அவர்கள் மகிழும் வகை வஞ்சித்தொழுகும் போலிக் கவிராயப் படிறரும் போலி வித்துவான்களும் மலிந்து அவர்கள் செய்யுங் குற்றங்க ளெல்லாம் புண்ணியங்களே யென்று சொல்லி அவற்றிற்கு நூற்பிரமாணங்களையும் தம் மனம் போனவாறு புரட்டிக் காட்டி மாயஞ்செய்து வருவார்களாயின், அறிவுடையீர்களான உங்கள் சொற்கள் அவர்கள் செவியில் ஏறாது போதல் சகசந்தானே.

ஒரோவொருகால் ஓர் ஆலயம் முழுதுமே பட்டுப்போயிருந்தால் மூலஸ்தான சிவலிங்கப் பெருமானைத் தவிர மற்றவற்றைப் பிரித்து, அவ்வாலயம் முன் அமைந்தபடியாகவே சிறிதும் பிசகாமல் அமைப்பித்தல் வேண்டும். எந்த ஆலயம் எந்த ஆகமத்தின்படி கட்டப்பட்டதோ அதனை அவ்வாகமத்தின்படியே திரும்பவும் அமைப்

பித்தல் வேண்டும். இனி அவ்விருபத்தெட்டுச் சிவாகமங்களினும், அவற்றின் உபாகமங்களினும் இரண்டு மூன்றுதாம் இப்போது காணக்கிடைப்பனவே யன்றி, ஏனைய காணக்கிடையா. சிவாலயங்களுக்கு மூலமான சிவாகமங்களைத் தேடி, எட்டுப் பிரதிகளில் நேர்ந்த வழுக்களைத் திருத்தி, அவற்றை விளக்கமான உரைகளோடு வெளியிடுவதற்கு நாட்டுக்கோட்டைப் பிரபுக்கள் ஏதுஞ் செய்வதாகத் தெரியவில்லையே. ஏதோ இரண்டொரு வேதபாடசாலையும் ஆகமபாடசாலையும் இரண்டோர் இடங்களில் வைத்துவிட்டாற் போதுமா? அவ்வேத பாடசாலைகளிற் கற்றுத் தேறி அவ்வேதப் பொருள்களை எல்லாரும் தெரிந்துகொள்ளும்படி போதிக்க வந்தவர்கள் எத்தனை பேர்? அப்போதனைகளைக் கேட்டு அவ்வேதப் பொருளை அறிந்தோர் எவ்வெவர்? அவ்வாகம பாடசாலைகளில் ஆகமங்களைக் கற்று வெளிவந்தவர் எவர்? அவர் எவ்வெவ் ஆகமங்களை ஓதி உணர்ந்தார்? ஆகமங்களிற் சிற்சிலவேயன்றி ஏனைப் பலவெல்லாம் காணக்கிடையாதபோது அவற்றை ஓதுவதுதான் எப்படி? என்று எழும் வினுக்களுக்கு அப்பாடசாலைகளை வைத்தவர் எங்ஙனம் விடை கூறுவரோ? அது கடவுளுக்குத்தான் தெரியும்! ஆயினும், இவ்வேதாகம பாடசாலைகளிற் கற்றுத் தேறினவர் கோடிக் கணக்காக இவ்வுலகமெங்கும் பரவிச் சித்தாந்தத்தைப் போதிக்கின்றார்கள் என்று கண்டவாறு புகழ்ந்து, போலிக் கவிகள் பாடித்திரியப் போலிக் கவிராயர்கள் மலிந்திருக்கையில், அப்பிரபுக்களுக்கு மற்றவர் சொற்களைக் கவனிக்கவேண்டியது ஏது இருக்கின்றது! என்றாலும், உண்மையறிவுடையோர் உண்மையை உலகத்திற்குச் சொல்லாமல் விடார்! சிவாலயங்களை முழுதும் இடித்துத் தகர்த்துத் தரைமட்டமாக்கிக் கட்டுவதற்கு முன்னமே, சிவாகமங்கள் எல்லாவற்றையும் தேடி எடுத்துச் செப்பனிட்டுக் கட்டி உரைகளோடு வெளியாக்குவதே நாட்டுக்கோட்டைச் செட்டிப் பிரபுக்கள் இப்போது அவசியமாகச் செய்யவேண்டிய கடமை என்பதனைத் தெரிவிக்கின்றாம்.

மேலும், நாட்டுக்கோட்டைச் செட்டிப் பிரபுக்கள் சிதம்பரம், திருவண்ணமலை, மதுரை, இராமேச்சுரம்போன்ற பிரபலமான ஸ்தலங்களுக்கே திருப்பணி செய்ய முந்துகின்றார்கள். இப்பிரபலமான ஸ்தலங்களுக்கு மேலே நாம் சொல்லியவாறு ஏராளமான வரும்படி யிருத்தலால், அவர்கள் உதவியில்லாமலே அவற்றின்

திருப்பணி எளிதிலே நடந்தேறும். சமயாசாரியர் பாடல் பெற்ற வும், இவ்வளவு பிரபலமின்றி யிருக்கும் சிவதலங்களும் பிறவும் எண்ணிறந்தன; இவைகளிற் சில பழுதாகவும் இருக்கின்றன; இவற்றைப் பழுதுபார்த்தல் மிகவும் அவசியமாகும்; இவற்றைப் பழுதுபார்ப்பதற்கு ஏராளமான பொருட்செலவு நேராது; புண்ணியமோ மிகுதியாய்ச் சேரும். ஆனாலும், நாட்டுக்கோட்டையார் இவற்றைப் புதுக்குவிப்பதிற் கருத்துக்கொள்ளாமல், திருப்பணி வேண்டாத பிரபலமான வலுத்த சிவாலயங்களின் பொருட்டு ஏராளமான திரவியத்தைச் செலவிடுதல் யாது பயன் குறித்தோ? அறிவுடையீர் சொல்லுமின்!

இனி இக்காலத்திற்கு அவசியமாக வேண்டப்படும் தருமங்கள் பற்பல. அவற்றுள் முதன்மையானது வித்தியா தருமம். சத்திரஞ் சாவடிகள் அமைப்பித்து அன்னதானம் மாத்திரம் பண்ணுதலைவிட இவ்வித்தியாதானம் எத்தனையோ கோடி மடங்கு சிறந்ததாகும். அன்னம், அழிந்துபோகும் உடம்பைமாத்திரம் சிலகாலம் வளர்ப்பதாகும்; வித்தையோ அழியாத ஆத்மாவின் அறிவை வளர்த்து அதனோடு எல்லாப் பிறவிகளினுந் தொடர்ந்து சென்று கடைசியிற் சிவானந்தத்தைப் பயப்பிக்கும். அன்னம் உண்பவன் அதனாற் சோம்பல் அடைந்து தனக்கும் பிறர்க்கும் பயன்படாது போதலும் உண்டு; கல்வியை உண்பவனோ சோம்பலின்றிச் சுறுசுறுப்புடையவனாய்த் தன்னையும் அறிவால் விளங்கச்செய்து பிறரையும் விளக்கிப் பெரிதும் பயன்படுவன். அன்றியும் கூன், குருடு, நொண்டி, நோயாளி முதலானவர்களுக்கு அல்லாமல் மற்றவர்களுக்கு அன்னதானஞ் செய்தல் இக்காலத்திற்கு அவசியமானது அன்று; ஏனென்றால், நீராவி வண்டிகளின் உதவியாலும் நீராவிக் கப்பல்களின் உதவியாலும் இப்போது பலவகையான வியாபாரங்களும் பலவகையான கைத்தொழில்களும் முன்னையினும் ஆயிரம் மடங்கு பெருகி நடத்தலினாலும், ஒரு தேசத்திலுள்ளவர்கள் மற்றொரு தேசத்திற்கும், ஒரு நகரத்திலுள்ளவர்கள் மற்றொரு நகரத்திற்கும், ஓர் ஊரில் உள்ளவர்கள் மற்றோர் ஊருக்கும் எளிதாகப் போக்குவரத்துச் செய்து மிகுதியான பொருள் தேடி வருதலினாலும் அவயவப்பழுது இல்லாதவர்களுக்கு இந்நாளில் அன்னதானஞ் செய்வது பலவகையான தீங்குகளை விளைவிப்பதற்கே இடமாகின்றது. இக்காலத்திற்போல ஓர் ஊரிலிருந்து வேறு ஓர் ஊருக்குப்

போதற்கும் வியாபாரங்கள் கைத்தொழில்கள் செய்தற்கும் முற்காலங்களில் வசதிகள் இல்லாமையால் தொழில் செய்ய விருப்பமுள்ள ஏழைகளுக்கும் அக்காலங்களில் வேலை கிடைப்பது அரிதாயிருந்தது ; அதனால் முற்காலத்துச் சனங்கள் பெரும்பாலும் ஏழைகளாய் வயிற்றுக்குச் சோறுங் கிடையாமல் ஆயிரக்கணக்காய் அடிக்கடி பஞ்சத்தினால் இறந்தனர் ; அதுபற்றியே அக்காலத்தில் அன்னதானம் மிகச் சிறந்த தருமமாக வற்புறுத்திப் போதிக்கப்பட்டது. இனி, இக்காலத்தின் இயற்கையினைச் சிறிது ஆராய்ந்து பார்க்கும் விவேகிகளுக்கு அன்னதானத்தினும் வித்தியாதானமே இக்காலத்திற்கும் மற்றெக்காலத்திற்கும் அழியாத தருமமாகும் என்பது நன்கு விளங்கும். கல்வி வளருமானால் அறிவும் அன்பும் வளரும் ; ஒழுக்கம் திருந்தும் ; கடவுளிடத்து மாறாத சிந்தையுண்டாகும் ; தன்னயந் தொலைந்து எல்லாருஞ் சகோதர ஒருமையுடையவர்களாய் இப்பிறவியிலேயே சொல்லுதற்கரிய பேரின்பத்தை அடைவர் ; சைவசமய உண்மைகள் உலகமெங்கும் பரவும்.

சமய உணர்ச்சியைப் பரவச் செய்வதற்குக் கல்வியைவிடச் சிறந்தது வேறில்லை. இந்த இரகசியத்தை அறிந்தே கிறிஸ்துவர்கள் இவ்வுலகமெங்கும் பள்ளிக்கூடங்களும் கலாசாலைகளும் தாபித்து எவ்வகைச் சாதியார்க்கும் எவ்வகைச் சமயத்தார்க்கும் கல்வியறிவு ஊட்டிவருகிறார்கள் ; நகரங்கடோறும் நாடுகடோறும் ஊர்கடோறும் குக்கிராமங்கடோறும் அவர்கள் வைத்து நடத்தும் பள்ளிக்கூடங்களைக் காணலாம் ; ஒரு நகரத்திலேயே, ஓர் ஊரிலேயே அவர்களால் வைத்து நடத்தப்படும் எத்தனையோ பள்ளிக்கூடங்களைப் பார்க்கலாம் ; பறைச்சேரி பள்ளச்சேரிகளிலுங்கூட அவர்கள் மிக எளிய தாழ்ந்த சாதியார்க்குப் போதிக்கும் பள்ளிக்கூடங்களைக் காணலாம். அது மாத்திரமேயோ, அவர்களது மதத்தின் உண்மைகளை எடுத்துப் போதிக்கும் மத போதகர்களை ஒவ்வோர் இடத்திலும், தெருவிலும், சந்திலுமாக இவ்வுலக முழுதும் பார்க்கலாம். அது மாத்திரமோ, தமது மதத்தைப் பலருஞ் சென்று கேட்டு அறிவதற்குரிய மண்டபங்கள் நாடு நகரங்கள் கிராமங்களில் எல்லாம் எத்தனையோ எத்தனையோ அவர்களாற் கட்டப்பட்டிருக்கின்றன ; அவைகளிலே கிறிஸ்துவர்கள் தம்மனைவி மக்கள் முதலாயினரோடு தமது வேத புஸ்தகத்தையும் எடுத்துக்கொண்டு ஞாயிற்றுக் கிழமைகடோறும், மற்ற விசேஷ காலங்களினுஞ்

சென்று அவ்விடங்களிலே தங் குருமார்கள் உபதேசிக்கும் மத விஷயங்களை அறிந்து வருகின்றார்கள். இவற்றோடு, நோயாளிகளுக்கு நோய் தீர்க்கும் வைத்திய சாலைகளும், ஏழைப் பிள்ளைகளுக்கும் அநாதைப் பிள்ளைகளுக்கும் ஊண் உடை கொடுத்து அவர்களைப் பாதுகாத்து கல்வி கற்பிக்கும் தரும பள்ளிக்கூடங்களும் அவர்களால் எத்தனையோ ஆங்காங்கு வைக்கப்பட்டிருக்கின்றன. இங்ஙனம் கிறிஸ்துவர்கள் தமது சமயஞானத்தைப் பரவச் செய்யும் பொருட்டுச் செய்து வரும் மிகவும் புகழத்தக்க முயற்சிகள் இன்னும் எத்தனையோ இருக்கின்றன. அவர்களாற் பிரசுரிக்கப்படும் கிறிஸ்துமதபோத பத்திரிகைகளுக்கும், அவற்றையும் கிறிஸ்து மத புத்தகங்களையும் பதிப்பிக்கும் அச்சியந்திரசாலைகளுக்கும் கணக்கில்லை. இதற்கு முன் இந்நிலவுலகமெங்கும் பரவி மிகப் பெரியதாய் நின்றது புத்தசமயமேயாகும்; இப்போதோ கிறிஸ்துவர்கள் செய்துவரும் அரிய பெரிய முயற்சிகளினாலே கிறிஸ்துமதம் முன்னையிலும் மிகுதியாய்ப் பெருகிப் புத்தசமயத்தினும் பெரிதாய் விளங்குகிறது. இந்த நில உலகமானது ஆசியாக்கண்டம், ஐரோப்பாக்கண்டம், ஆப்பிரிக்காக்கண்டம், ஆஸ்திரேலியாக்கண்டம், அமெரிக்காக்கண்டம் என ஐந்து பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. இந்த ஐந்து கண்டங்களிலும் மிகுதியாய்ப் பரவியிருப்பது இப்போது கிறிஸ்துமதமேயாகும்; இதற்கு அடுத்தபடியில் மிகுதியாய்ப் பரவியிருப்பது புத்தமதமேயாகும்; இதற்கு அடுத்தபடியில் எங்கும் பரவியிருப்பது மகமதிய மதமேயாகும்; இவற்றிற்கு அடுத்தபடிகளிலே பரவியிருப்பன பற்பல மதங்கள்; இங்ஙனம் சுருக்கமாகப் பரவியுள்ள பற்பல மதங்களிலே இந்து சமயம் என்பது இவ்விந்தியாவிலே மாத்திரம் மிகுதியாயிருப்பது; இவ்விந்தியாவோ மேற்கூறிய ஐந்து கண்டங்களுள்ளே ஆசியாகண்டத்தின் தெற்கேயுள்ள ஒரு சிறு தேசம்; இவ்விந்தியாதேசம் இந்நிலவுலகத்தில் அமைந்திருக்கும் பரிமாணத்தைப் பார்த்தால், இந்நிலவுலகத்தை ஓர் அரசிலையாகவும், இவ்விந்தியாவை அவ் அரசிலையின் மூக்காகவுஞ் சொல்லவேண்டும். நில உலகத்தின் மிகச் சிறிதாகிய இவ்விந்தியா தேசத்திலேயோ இப்போது பற்பல மதங்கள் இருக்கின்றன; இவற்றுள் சைவசமயமும் ஒன்று; இச்சைவ சமயமும் ஏகான்மவாத சைவம், வீரசைவம், சித்தாந்த சைவம் எனப் பலதிறப்படும். இனிச் சித்தாந்த சைவமே தென்னாட்டிலுள்ள

நம்மனோர்க்கு உரியதாகும். இந்நிலவுலகம் ஓர் அரசிலையாகவும், இந்தியா அதன் மூக்காகவும் அமையவே, இத்தென்னாடு அம்மூக்கின் நுனிபோல் மிகச் சிறிதாய் இருக்க, இச்சிறிதாகிய நாட்டிலும் சிற்சில இடங்களிலே மாத்திரம் சைவசித்தாந்தம் காணப்படுகின்றது. ஸ்ரீலஸ்ரீ - ஆறுமுக நாவலரவர்களும், ஸ்ரீலஸ்ரீ - சோமசுந்தர நாயகரவர்களும் வருவதற்குமுன், சைவசித்தாந்தம், கற்றவர் சிற்சிலருக் கன்றி, மற்றைப் பெரும்பாலார்க்கு ஒரு சிறிதும் தெரியாது. ஆறுமுக நாவலரவர்கள் தோன்றி விதைத்த சித்தாந்த விதையானது, சோமசுந்தர நாயகரவர்களால் முளைகிளம்பிப் பயிராக வளர்க்கப்பட்டது; அவர்களுக்குப்பின் ஸ்ரீலஸ்ரீ - சுவாமி வேதாசலம் அவர்களால் அது மரமாக வளர்க்கப்பட்டு மலர்ந்து தனது ஒப்பற்ற மணத்தைத் தமிழ் ஆங்கில மொழிகளான இனிய காற்றின் வழியே செலுத்தி இவ்விந்திய நாட்டினும் அயல் நாடுகளினும் வீசுகின்றது; ஸ்ரீமான் - நல்ல சுவாமிப்பிள்ளை யவர்களால் ஆங்கில மொழி வாயிலாக ஐந்து கண்டங்களிலும் பரவி மணம் வீசுகின்றது. இன்னும் இது மதுரமாகிய தனது சிவஞானம் பழுத்துச் சிவானந்தத்தேனை உலகத்திலுள்ளார் எல்லார்க்கும் ஊட்டுவதாகிய காலம் நம் சுவாமிகள் நாளிலேயே வருமென்று ஆவலோடு எதிர்பார்க்கிறோம். மேல் எடுத்துக்காட்டியபடி உலகமெங்கும் பரந்து விளங்கும் கிறிஸ்துவம், பௌத்தம் முதலான சமயங்களோடு ஒப்பிட்டுப் பார்க்குங்கால், சைவசித்தாந்தம் எவ்வளவு சிறிய இடத்திலே மிக அருமையாய் வழங்கி வருகிறது என்னும் உண்மை எல்லார்க்கும் நன்கு புலப்படும். நம் சுவாமிகளைப்போற் சிற்சிலர் தோன்றினமையால் அன்றோ சைவசித்தாந்தம் இப்போது சிறிது சிறிதாகப் பிரபலமுற்று வருகின்றது? நம் சுவாமிகள் சிற்சில மாதங்களுக்கு முன் வட இந்தியாவில் ஆங்கிலத்திற் சைவசித்தாந்த உபந்நியாசங்கள் செய்யச் சென்றிருந்தபோது, அங்கே கற்றறிவுள்ள நம் இந்துக்கள் பலர் "சைவசித்தாந்தம் என்பது யாது? அது நமது இந்து சமயத்தைச் சேர்ந்தது தானோ? அது வேதத்தைப் பிரமாணமாகக்கொண்டதோ? அன்றோ?" என்று வினவிய சொற்களைக்கேட்டு நம் சுவாமிகள் மிகவும் வியப்புற்று அவற்றிற்கு ஏற்ற விடைகள் சொல்லி அவர்களை மகிழ்வித்து வந்தார்கள். அன்பர்களே! வேதசாரமாய் விளங்கும் நம் சைவசித்தாந்தம், அதற்கு உண்மையில் உரியவர்களான நம்மனோர்க்கே சிறிதுந் தெரிந்திலதாயின், அதன் அருகிய

நிலைமையைப்பற்றி நாம் இன்னும் சொல்லவேண்டுவதும் உண்டோ? அறிவுடையீர், ஆழ்ந்துபார்மின்!

இவ்வளவு அருகிய நிலைமையில் உள்ள சைவசித்தாந்தத்தையும், அதனை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளக்கிய தமிழ் நூல்களையும், அந்நூல்கள் உள்ள தமிழ்ப்பாஷையினையும், ஏராளமான பொருட்செலவிட்டுப் பிரகாசப்படுத்த வேண்டுவது இப்போது மிகவும் அவசியமாய் இருக்க, அதனைவிட்டு, வலுவாகக் கட்டப்பட்டுப் பழமையும், பிரபலமும், மிக்க பொருள்வருவாயுமுள்ள இராமேசுரம் முதலான சிவாலயங்களை மிகப்பெரிய பொருட் செலவால் இடித்துக் கட்டுவது அவசியமன்று என்று நம் சுவாமிகள் நன்மதிகூற, அதனைக் கேளாமையோடு தம்மையும் தம்மவர் செய்யுஞ் சிவாலய தருமங்களையும் சுவாமிகள் இகழ்ந்துவிட்டார்களென்று உண்மையறியாமற் குறை கூறிச் சுவாமிகளை வஞ்சத் துறவினரென்று வாய் கூசாது பழித்த செட்டியார் சிலரின் பேதைமைக்கும், பாவமிகுதிக்கும், ஆணவமுனைப்பிற்கும் நல்லறிவுடைய சான்றோர் மிக வருந்தி இரங்குகின்றனர். கிறிஸ்துவர்கள் எண்ணிறந்த பள்ளிக்கூடங்கள், கலாசாலைகள், மதபோதகர்கள், அறச்சாலைகள், பிரசங்க மண்டபங்கள், பத்திரிகைகள், அச்சியந்திரசாலைகள் முதலாயின வைத்துக் கல்வியையும் கிறிஸ்து மதத்தையும் பரப்பி வருவதனால் உலகமெங்கும் கிறிஸ்துமதமும் கிறிஸ்துமத ஆசாரமுமே பரவி வருகின்றன. இந்து சமயத்திற்கு உரியவரான நம்மவர்களில் ஆங்கிலப் பாஷையைக் கற்பவர்களே எங்கும் காணப்படுகின்றனர்; ஆங்கிலக் கல்வியே உயர்ந்த உத்தியோகங்கள் பெறுவதற்கும், அவற்றின் வழியாகப் பொருள் சம்பாதிப்பதற்குங் கருவியாயிருக்கின்றது. ஆதலால், எல்லாரும் அந்தப் பாஷையையே எவ்வளவோ பிரயாசை யெடுத்து விரும்பிக் கற்கின்றார்கள். கலாசாலைகளில் அந்தப் பாஷையிற் போதிக்கப்படும் நூல்கள் பெரும்பாலும் பிரத்தியக்ஷப் பிரமாணத்தையேகொண்டு அரிய விஷயங்களைத் தெளிவுபடுத்திக் காட்டுவனவாயிருத்தலால், அவற்றைக் கற்கும் மாணாக்கர்கள் பிரத்தியக்ஷப் பிரமாணத்திற்கு இசையாதனவற்றை நம்பாமல், நிரீசுவர வாதிகளாகின்றார்கள்; கிறிஸ்துவர் கலாசாலைகளில் அவற்றைக் கற்பவர்கள் கிறிஸ்துவ மதப்பற்றுடையவர்கள் ஆகின்றனர். இவர்களுக்குத் தமிழ் நூலின் அருமைகளும் சைவசித்தாந்த நூற்பொருள்களும் ஒரு தினையளவுந் தெரியா. இங்ஙனம்

ஆங்கில பாஷையைக் கற்று அதில் அறிவு பெற்றவர்களே இந்தியாவில் இலட்சக்கணக்காய் இருக்கின்றார்கள். இவர்கள் அத்தனை பேரும், கோயில்களுக்குச் சென்று விக்கிரக ஆராதனஞ் செய்வது முழுமூடத்தனம் என்று கருதிக் கோயில்களைத் திரும்பிப் பார்ப்பதும் இல்லை. இவர்களில் எவரேனும் தப்பித்தவறித் தமிழும் கூடப் படித்திருப்பார்களானால், அவர்களில் இரண்டொருவர் மாத்திரம் கோயிலுக்குப்போய்க் கடவுளை விக்கிரகத்தின் வழியாக வணங்க வேண்டுமென்று கூறுவார்கள். இங்ஙனம் கூறும் இவர்களையும் ஆங்கிலம்படித்த மற்றவர்கள் 'இவர் கருநாடகப் பைத்தியம்' என்று இகழ்வார்கள். இவ்வாறு கோயில் வழிபாட்டைச் சிறிதும் லட்சியப்படுத்தாதவர் தொகையே நாளுக்குநாள் வளர்ந்துகொண்டு வருகின்றது. இப்படியே நடந்து வருமானால் இன்னுஞ் சில நூற்றாண்டுகளில் கோயிலுக்குப் போகிற கற்றவர்கள் எவரையுமே காணல் எலாதாகும். இந்த உண்மையை எடுத்துக்காட்டும் பொருட்டே நம் சுவாமிகள் 'கோயிலுக்குப் போகிறவர்கள் இல்லாதபோது, கோயில் கட்டுவதால் பயன்யாது?' என்று எழுதினார்கள். சுவாமிகள்எழுதிய இவ்வுண்மை சிற்றறிவுடைய சிறு மகாருக்கும் விளங்குவதாகவும், இதுதானும் உணரமாட்டாத போலிமாக்கள் சிலர் தம்மைக் கற்றவராக மதித்து இறுமாந்து ஒழுகும் பேதைமையின் பிரபாவத்தால் நம் சுவாமிகளைக் 'கிணற்றுத்தவளை' என்றும், கோயிலுக்குப்போய் அங்கே ஏராளமான சனங்கள் வருதலைப்பார்த்தறியாதவர் என்றும் தம்மனம்போனவாறு இகழ்ந்து குழறுவாரானார். சாமானிய சனங்கள் கோயிலுக்கு வருவதை அறியாதவர்கள் எவர்தாம் உளர்? இங்கெடுத்த விவகாரம் சாமானிய சனங்களைப்பற்றியதன்று. இன்றைக்குச் சிவாலயத்திற்கு வருஞ் சாமானிய சனங்கள் நாளைக்கு மதுரைவீரன் கோயிலுக்கும், பிடாரியம்மன் கோயிலுக்கும்போய் ஆயிரக்கணக்கான ஆடுகள் கோழிகள் எருமைக் கிடாய்கள் வெட்டிச் சாராயங்குடித்து வெறியாடுவார்கள். சிவபெருமானுக்கும் மதுரைவீரன் பிடாரிக்கும் உள்ள வித்தியாசம் இந்தச் சாமானிய சனங்களுக்குத் தெரியாது. இன்னும் சிவபெருமானைவிட பிடாரி மதுரைவீரனைப் பெரியவாகமதித்து அவற்றினிடத்தே பயபத்தியுடன் நடப்பவர்கள். இப்படிப்பட்டவர்கள் சிவாலயங்களுக்கு வருவதும் வாராததும் ஒன்றுதான். ஆனாலும், ஈழக்குலச்சான்றாருக்குப் பூசாரிகளாய் இருந்து ஆடுகோழிவெட்டி எசக்கியம்மன் பிடாரி முதலியவற்றை வணங்கிவந்த கயவர் இப்

போது சைவ வேளாளப்பெயரைத் தலையிற்கட்டிக்கொண்டு தாமுங் கற்றவர்போல் ஆரவாரஞ்செய்து வெளிவரினும், அவர்கள் கண்ணுக்குத் தாம் முன் பழகிவந்த சாமானிய சனங்கள் கோயிலுக்கு வருவது தானே பெரிதாய்த் தோன்றும். சிவபுண்ணியஞ்செய்துவரும் நாட்டுக்கோட்டைச் செட்டிமார்களை ஈனசாதியார் என்று இகழ்ந்து, அவர்களை 'எங்கள் சைவபந்தியில் வரவிடோம்' என்று அவமானப்படுத்தும் போலிச்சைவர் சிலர், பின்னர் அவர்களிடம் பொருள்பறிக்கும் பொருட்டு அவர்கள் எதிரேசென்று இச்சகம்பேசி 'உங்களைவிடப் புண்ணியத்திற் சிறந்தார் யார்? நீங்கள் செய்யும் சிவாலயத் திருப்பணிகளை வேதாசலனுர் இகழுகிருர், பார்த்தீர்களா?' என்று முழுப் பொய்சொல்லி அவர்களில் அறிவு மூடமாய்ப் போன சிலரை ஏய்க்கும் இக்காலத்தில், நம் சுவாமிகள் சொல்லும் உறுதிப் பொன்மொழிகள் அவர் ஏய்ப்பின் வசப்பட்ட செட்டிப்பிரபுக்கள் காதில் எங்ஙனம் ஏறும்? சிவத்தின் உயர்வையும் சிவாலயங்களின் இரகசிய உண்மைகளையும் கோயிலுக்கு வருபவர் உணர்ந்திருக்கிருர்களா? அல்லது கோயில்கட்டும் பிரபுக்களுக்குத்தாம் அவைகள் தெரியுமா? சிவத்தின் இலக்கணங்களையும் சிவாலயங்களின் உண்மைகளையும் கோயிலுக்கு வருபவர் வராதவர்களாகிய எத்திறத்தவரும் அறியும்படி செய்வித்து, அவர்கள் எல்லாரும் கோயிலுக்கு வரும் விருப்பங்கொள்ளும்படி அவர்களைச் சிறந்த அறிவுடையராக ஆக்குவித்தலன்றே உத்தமோத்தம சிவபுண்ணியமாகும்? "நீங்கள் திருப்பணி செய்யப் போகும் பிரபலமான சிவாலயங்கள் வலுவான கட்டிடங்களாய் இருத்தலால், அவற்றினை இடித்துக்கட்ட ஏராளமாகப் பொருட் செலவு செய்யாதீர்கள்; அப்படிச் செய்யவேண்டுமாலும் பழுதுபட்ட இடங்களை மாத்திரம் புதுப்பித்து விட்டு, மற்றப் பெருந்தொகைகளைச் சைவசித்தாந்தப் பிரகாசத்திற்கும் தமிழ் கல்வி வளர்ச்சிக்கும் பயன்படுத்துங்கள். நாடுகள்தோறும், நகரங்கள் தோறும், குக்கிராமங்கள் தோறும் பள்ளிக்கூடங்களுங் கலாசாலைகளும் அமைப்பியுங்கள்; சைவசமயநூல்களையும் தமிழையும் எங்கும் கற்பியுங்கள்; கல்விபயிலும் விருப்பம் உள்ளவர்களுக்கெல்லாம் ஊண் உடை புத்தகங்கள் கொடுப்பித்து அவர்களை அதிற் றேர்ச்சி பெறச்செய்வியுங்கள்; தேர்ச்சிபெற்றவர்கள் பொருள் சம்பாதித்தற்கு வழிகள் காட்டுங்கள்; சைவசமயபோதகர்களை நூற்றுக்கணக்காகவும் ஆயிரக் கணக்காகவும் நியமித்து அவர்களுக்கு நல்ல சம்பளங்கள் தந்து

அவர்கள் எவ்விடங்களினுஞ் சென்று சைவசமய உண்மைகளைப் போதிக்கும்படி செய்வியுங்கள்; தமிழையுஞ் சைவ உண்மைகளையும் வளர்க்கும் பத்திரிகை புத்தகங்களையும், அவற்றைப் பதிப்பிடும் அச்சியந்திர சாலைகளையும் ஆயிரக்கணக்காகப் பெருகச் செய்யுங்கள்; கூன் குருடு நொண்டி வலியற்றவர்களுக்கு அன்னசாலைகள் அறச்சாலைகள் எங்கும் வைப்பியுங்கள்; நோயாளிகளுக்கு வைத்தியசாலைகள் ஏற்படுத்துங்கள்; சைவசித்தாந்த சபைகள் கூடுவதற்கு விசாலமான அழகிய மண்டபங்கள் ஆங்காங்கு கட்டுவியுங்கள்; இவற்றினுஞ் சிறந்த புண்ணியம் வேறில்லை" என்று நம் சுவாமிகள் மிக உயர்ந்த சிவபுண்ணியங்களைச் செய்யும்படி. வினுல், விரிந்தநோக்கம் பற்றிச் சொல்லிய அவ்வுபதேசங்களின் உண்மை தெரியாமல், 'நகரத்தார் அந்த ஊரிலே தேவார பாடசாலை வைத்திருக்கிறார்கள்; இந்த ஊரிலே வேதபாடசாலை வைத்திருக்கிறார்கள்; அங்கே அந்தச் சத்திரம் கட்டித் தருமஞ்செய்கிறார்கள்; இங்கே இந்தச் சபை வைத்திருக்கிறார்கள்; அவர் அந்த வித்வானுக்குப் பொருளுபகரித்தார்; இவர் இந்தப் புலவரை ஆதரித்தார்; அவர்களில் இவர் கற்றவர்; அவர் மாமிசம் நீக்கிச் சிவபூசை செய்பவர்;' என்று சிற்சிலவற்றைச் சுட்டிச் சொல்லி நகரத்தாரைத் திருத்திசெய்து மொற்றுவதற்கு வஞ்சத்திற் பழகிய போலிக் கவிராயரும் போலிப் புலவருமன்றி மற்றெவர் தாம் வல்லர்! நகரத்தார்கோயில் கட்டுவதற்குச் செலவிட்ட தொகையின்பேர் அளவினையும், மற்றச் சில வித்தியா தருமங்களுக்குச் செலவிட்ட தொகையின் சிற்றளவினையும் ஒப்பிட்டால் அஃது ஒரு பெரும் பனம்பழத்தோடு ஒரு சிறு தினையினை ஒப்பிட்டுச் சொல்லுவதற்கே சமமாகும். அவர்கள் ஐந்துகோயிலுக்குச் செலவிட்ட அவ்வளவு பெருந்தொகை, சைவ சித்தாந்தத்தையும் தமிழையும் விருத்திசெய்யும் கருத்தும் முயற்சியும் உள்ள அறிஞன் ஒருவன் கையிலிருந்தால், இவ்விந்தியா தேசமே யன்றி இந்நிலவுகத்தின் ஐந்து கண்டங்களிலும் சைவமும் தமிழும் தமது மணத்தை வீசி உலவாநிற்கும். உலகம் எங்கும் உள்ள சருவான்மாக்களும் பயன்படுதற்குரிய அவ்வளவு பெருந்தொகை அநாவசியமாகத் தென்னாட்டிற் சில சில இடங்களிலுள்ள கோயில்களிற்போய் அடங்கிவிட்டால், ஓ! சிவஞான தருமத்தின் மேன்மையை உணர்ந்த அறிஞருக்கு இது வருத்தத்தை விளைவியாதிருக்குமோ? நாட்டுக்கோட்டைச் செட்டிப் பிரபுக்களில் சிவஞான தருமத்தின் மேன்மையை யுண

ரும் புண்ணியமும் விவேகமும் உடையோர், நம் சுவாமிகள் கூறிய தருமங்களே இக்காலத்தில் அவசியமாகச் செய்தற்குரியன வென்றும் இவற்றை விடுத்துத் தம்மவர் கோயில்களிலே கொண்டுபோய் ஏராளமான திரவியத்தை அழித்தல் மிகவும் வருந்தத்தக்க தென்றும் தமது கருத்தை நன்றாக வெளிவிட்டுச் சொல்லுகிறார்கள். ஆகையால், நாட்டுக்கோட்டைச் செட்டிப்பிரபுக்களாகிய புண்ணிய சீலர்களே! தந்நயத்தையே கருதி உங்களிடம் பொருள் பறிக்க இச்சகம் பேசும் நல்லறிவில்லாப் புல்லரான போலிக்கவிகளின் புறங்கூற்றுப் பொய்ம்மொழிகளைக் கேளாமல், நம் ஸ்ரீலஸ்ரீ - சுவாமி வேதாசலம் அவர்கள் எடுத்துக்கூறும் தரும உபதேசங்களைக்கேட்டு அச்சிவதருமங்களைச் செய்து அழியாப் புகழும் சிவபுண்ணியமும் பெறுவீர்களாக.

இனிப் பொறாமைப் பித்தேறி அறிவுமருண்ட குறும்பர் சிலர் நம் சுவாமிகளைப் பழித்துரைத்த சில பதர்மொழிகளைக் கண்டு சாமானியர் மயங்காமைப் பொருட்டுச் சிற்சிலவற்றை இங்கெடுத்துக்காட்டி அவ்வளவோடு இதனை நிறுத்துகின்றோம். நம் சுவாமிகள் தமது இளமைப்பருவந்தொட்டே இலக்கண இலக்கிய தருக்க நூல்களையும், சைவசித்தாந்த சாஸ்திரங்களையும் நல்லாசிரியர்களிடத்தே முறையாகக்கற்று அறிவு நிரம்பித்திகழும் உண்மை, முதலில் யாம் எழுதிய அவர்களது சரித்திரச் சுருக்கத்தாலும், அவர்கள் இயற்றிய நூல்களாலும், அவர்களைப்பற்றிக் கற்றோர் தெரிவித்த அபிப்பிராயங்களாலும் இனிது விளங்கும். அங்ஙனமாகத் தமிழ் இலக்கண இலக்கியம் இருந்த மூலையையுங் கண்டறியாது, தருக்க நூல் சைவசித்தாந்த நூல்களை அவற்றை யுணர்ந்தோர்பாற் கேட்டேனும் அறியாது, அழிபொருளையே தெய்வமாக எண்ணி அதனைத் தொகுத்தலிலேயே பேயாய்த்திரியும் புல்லர் சிலர் நம் சுவாமிகளை முறைப்படக் கல்விகல்லாதவர் என்று பழித்தால், அப்பொய்யுரையை அறிவுடையோர் எவரும் கேளார். நம் சுவாமிகள் திருநெல்வேலி நெல்லையப்பராலய வசந்த மண்டபத்தில் நாலாயிரம் அன்பர்கள் கூட்டத்திடையே ‘சிவலிங்கவழிபாடு’ என்னுமுபந்நியாசத் தேன்மாரிபொழிய அதனைக்கண்டு மனம் புழுங்கிய ஒருவர் உபந்நியாச முடிவில் எழுந்து சிற்சிலவற்றை மெய்ந்நடுங்கி வாய்குழறிக்கூற, உடனே சுவாமிகள் எழுந்து அவர் குழறியவற்றை மறுத்துத் தம் பொருள் நாட்டி, இன்னும் இவற்றில் ஐயமுறுவோர் உளராயின் அவருக்கு அவ் ஐயத்

தினை விலக்கி உண்மை காட்டுவோம் என்று கேட்டும், அவர் வாய் பேசாது இருந்ததும், அதனைக் கண்டு சபையாரெல்லாரும் அங்ஙனம் குழறியவர்மேல் வெறுப்புற்று நம் சுவாமிகள் உபந்நியாசத்தினை வியந்துபாராட்டியதும் திருநெல்வேலியில் உள்ளார் எல்லாரும் நன்கு அறிந்திருப்பவும், அவ்வுண்மையை மறைத்துச் சுவாமிகளைப் பழித்துக்கூறிய பொய்யர் நா என்னாகுமோ! நாட்டுக்கோட்டையாரில் விவேகிகளாயுள்ளார் நம் சுவாமிகளின் உபந்நியாச விசேஷத்தினை நன்கு உணர்ந்து தம் நாடுகளுக்கு வரும்படி எத்தனையோமுறை அழைத்தும், அக்காலங்களில் நேர்ந்த வசதியீனங்களால் தாம் அவர்கள் வேண்டுகோளுக்கு இணங்கிச்செல்லாமையே உண்மையாயிருக்க, அதனை மறைத்து, நம் சுவாமிகள் சைவசித்தாந்தம் உணராதது பற்றியே அவர்களை அவர்கள் வரவழைத்திலர் என்றுரைத்துச் சைவசித்தாந்தத்திற்குப் புறம்பான புறச்சமயத்துட்பட்டு மயங்கும் பதடிகள் கூறும் பழிப்புரைப் பொய்மையை அறக்கடவுள் நன்கு அறியுமாதலின், அஃது அவர் பொய்ந்நாவைப் போழ்படுக்குமென்பது திண்ணம். இலங்கை முதல் இமயம் வரையிலும் உள்ள கற்றோர் எல்லாரும் நம் சுவாமிகள் சைவசித்தாந்த நுணுக்கங்கள் மிகச் செவ்வையாக உணர்ந்தவர்கள் என்று பாராட்டி, அவர்கள் செய்யும் சைவசித்தாந்த உபந்நியாச அமிழ்த மழையை நிரம்ப உண்டு அதன் இனிமையை நினைந்து நினைந்து மகிழ்ந்து புகழா நிற்ப, நல்லார்பால் உள்ள நலத்தைக் கைக்கொள்ள மாட்டாத கையறியாக் குறும்பர் அவர்களைச் சைவசித்தாந்தம் அறியாதவர் என்றும், அவர்கள் பிரசங்கம் வழ வழ வென்றிருந்த தென்றும் பொறாமையால் மனந்திரிந்து பிதற்றுவராயின், அவர் பிதற்றுரையை அறிவுடையோர் எற்றி இகழ்ந்து போவர். திருக்காட்டுப்பள்ளிக்கு அடுத்துள்ள இளங்காடு என்னும் ஊரில் 'நற்றமிழ்ச்சங்கம்' வைத்திருக்கும் அன்பர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி அதற்கு அக்கிராசனராய்ச் சென்றிருந்த நம் சுவாமிகள் அப்போது 'திருஞானசம்பந்த சுவாமிகள் சரித்திர' விஷயத்தை எடுத்து உபந்நியசித்துச் சபையாரை உளம் மகிழ்ந்து பூரிக்கச் செய்த உண்மை, அவ்விளங்காட்டுச் சபையாரை இப்போது கேட்பினும் நன்கு விளங்கும்; அவ்விளங்காட்டை விட்டுவரும்போது திருக்காட்டுப்பள்ளியில் உள்ளார் நம் சுவாமிகளை எதிர்கொண்டு அழைத்து, அங்குள்ள சிவாலயத்தில் 'சிவலிங்கவழிபாடு' என்னும் விஷயத்தைப்பற்றி உபந்நியசிக்கும்படி வேண்டிக்

கொள்ள, அதற்கு இணங்கி நம் சுவாமிகள் அவ்விஷயத்தை அங்கே குழுமிய அன்பர் பெருங்கூட்டத்திலே உபந்நியசித்து அவர்கள் எல்லாரும் பேரானந்தம் அடையும்படி செய்வித்தனர்கள்; அப்போது அச்சமயத்தில் வந்திருந்த வேத பண்டிதரான பிராமணர்கள் நம் சுவாமிகள் 'சிவலிங்க வழிபாட்டை'ப் பற்றிச் சொல்லிய உண்மைகள் வேதத்தின் உண்மைப் பொருளாகுமென்று பாராட்டிப் பேசினதும் அங்குள்ளார் எல்லாரும் அறிவர்கள்; இளங்காட்டிலும் திருக்காட்டுப்பள்ளியிலும் நடந்தவை இவ்வளவே; இங்ஙனமாகச் சுவாமிகள் 'ஆன்ம இலக்கணம்' என்பதைப்பற்றி உபந்நியசித்ததாக விஷயத்தையும் மாற்றி, ஊர்ப்பெயரையும் மாற்றிப் படுபொய்யுரைக்கும் பதகர், நம் சுவாமிகளை இகழுதற்பொருட்டு வேறு எதனைத்தான் கட்டிச் சொல்லார்! அங்ஙனம் பொய் கூறி இகழ்வார் நாவை ஈரும் அறவாள் அறக்கடவுள் திருக்கரத்திற் சித்தமாக உளது என்பதையும் அப்பதகர் உணராமை அந்தோ! பாவம்!

இனி "எழிலின் மிக்கதோர் உடலது பெறுதலும் அரிதே" என்ற நூற் பிரமாணத்தால், அழகும் தேசசும் வாய்ந்த சரீரத்தைப் பெறுதல் மேற்செய்த புண்ணியத்தின் பயனே யாகும். நம் சுவாமிகள் தவத்தாற் பிறந்தவராகலின் நீண்டு உயர்ந்த அழகான மெல்லிய சரீரம் வாய்க்கப் பெற்று விளங்குகிறார். அதனோடு, இளம்பருவம் முதற்கொண்டே சிவ சிந்தனையும் நல்லொழுக்கமும் உடையராய்க் கல்வியிலும் சிவஞானத்திலும் பழகி எல்லா உயிர்களிடத்தும் அன்பு பாராட்டி வருதலால், அவர்கள் உடம்பின் அழகும் தேசசும் வர வர மிகுந்து தோன்றுகின்றன; அது மாத்திரமேயோ, சற்குரு நாதனைத் தரிசித்துச் சிவராஜயோக பிராணயாம அப்பியாசமுஞ் செய்து வருதலால் அவர்கள் என்றும் இளம்பருவமுடையராகவே திகழுகின்றார்; சுவாமிகட்கு இப்போது வயது சற்றேறக்குறைய நாற்பதாகியும் அவர்களைப் பார்ப்பவர்களெல்லாம் இருபது அல்லது இருபத்திரண்டு வயதுதான் மதிப்பிட்டு வியக்கிறார்கள். இவ்வளவு இளமையும் தேசசும் அவர்களிடம் உண்டாவதற்குக் காரணம், அவர்களிடம் உள்ள அன்பும் அருட்குணமுமேயாம். அன்பும் அருளும் மிக மெல்லிய இனிய குணங்களாதலால், அவை சிவ சத்தியாகிய அம்மையின் குணங்களென்று ஞான நூல்கள் கூறும்; இதனை "அருளது சத்தியாகும்" எனுந் திருவாக்கிற் காண்க. அம்மையின் வடிவு பெண் வடிவமே என்பதும் நூல்களால் உணர்த்தப்பட்ட உண்மை

யாம். இதனாலேதான் பெரும்பாலும் பெண் மக்கள் எல்லாரும் மென்றன்மையும் ஆண்மக்கள் எல்லாரும் வன்றன்மையும் உடையராகக் காணப்படுகின்றனர். இனி ஆண்மக்களுள்ளும் அன்பும் அருளும் ஆகிய மெல்லிய சிவசத்தி குணங்கள் நிறையப்பெற்று வருவோர்க்கு அவர் தம் உடம்பும் மெல்லிய தன்மையுடையதாய் வசீகரம் மிகுந்து பெண்ணுடம்புபோல் அழகியதாய்த் தோன்றும். இனிப் பெண்மக்களுள்ளும் ஈவு இரக்கமின்றி உக்கிரகுணமுடையராய் வருவோர்க்கு அவர் தம் உடம்பு முரடுபட்டு வன்றன்மையுடையதாய்ப் பார்ப்பவர்க்கு அச்சந்தோற்றுவிக்கும் இயல்பு வாய்ந்து ஆண் உடம்புபோல் அழகு குறைந்து தோன்றும். இவ்வொற்றுமை வேற்றுமைகள் அவ்வவர் ஆன்ம குணங்களையும் சரீர அமைவுகளையும் நன்கு ஆராயவல்ல அனுபவம் உடையார்க்கெல்லாம் நன்கு விளங்கும். சாந்தகுணமே இயற்கையாக்கொண்ட ஒருவனையும், கோபமே கொடுமையே இயற்கையாக்கொண்ட மற்றொருவனையும் சிறிது உற்றுப்பார்த்தாலும், முன்னவன் மிருதுவான ஒரு பெண்ணைப்போல்பவனும் பின்னவன் கடினமான ஆணுடம்பு உடையனுந் தோன்றுதலை அனுபவத்தில் அறியலாம். நம் சுவாமிகள் அன்பு அருள் என்னும் சிவசத்தி குணங்கள் நிறையப் பெற்றவராய் வளர்ந்து வருதலால், பெண்ணுடம்பு போன்று மெல்லிய தன்மையுடையவர்களாய்த் துலங்குகிறார்கள்; அவர்கள் குரலும் பெண்மக்கள் குரல்போன்று மென்மையும் இனிமையும் வாய்ந்திருத்தலால் அவர்கள் உபந்நியசிக்கும்போது இடையிடையே மேற்கோள்களாகத் தேவார திருவாசகச் செய்யுட்களை இசையுடன் எடுத்து ஓதக் கேட்பவருள்ளம் எல்லாம் உருகிப் பத்திவசப்படுகின்றது. இவ்வருமைகள் பாவிகளாகிய தமக்கு வாயாமையால் புல்லறிவாளர் சிலர் பொறாமையால் மதி மயங்கி நம் சுவாமிகளைப் பெண்டன்மையுடையரெனச் சொல்லி அதனையும் ஓர் இகழ்ச்சியாக நினைந்து தம்மோடொத்த புல்லறிவாளருடன் கூடி நகையாடுகின்றனர்! அந்தோ! இவர்கள் அறியாமை இருந்தவாறென்னே! பெண்டன்மை என்பது அன்பு அருள் என்னும் மென்குணத்தொகுதியே யாதலின், அதனை நம் சுவாமிகள் உடையராவது பற்றி உண்மையறிவுடையார் அவரைப் புகழ்வாரேயல்லது ஒருகாலும் இகழமாட்டார்; பெண் மக்களென்றால் இகழத்தக்கவர்களா? பெண்மக்களை இகழ்வது சிவசத்தியை இகழ்வதேயாகும். நம்மைப் பத்துமாதஞ் சுமந்து பெற்றெடுத்து வளர்த்தவர்

களும் பெண்மக்களே; சகோதரிகளாய் நம்முடன் பிறந்து நம்மை அன்பாய்ப் போற்றி வந்தவர்களும் பெண்மக்களே; மனைவிமாராய் நம்முயிரைத் தம்முயிராய்ப் பாதுகாத்து நம்மை நல்லின்பச் செல்வ வாழ்வில் வைத்து நம்மைப் பரிசுத்தப்படுத்தினவர்களும் பெண்மக்களே; இனி வருவதாகிய முத்திப் பேரின்பவாழ்வை நமக்கு அருளி நம்மை அழியா இன்பச் செல்வவாழ்வில் அமைப்பவளும் நம் உலகன்னையாகிய பெண்மகளே. இவ்வுண்மையைச்

“ சிவமெனும் பொருளும் ஆதிசத்தியொடு சேரின் எத்தொழிலும் வல்லதாம், இவள் பிரிந்திடின் இயங்குதற்கும் அரிதரி தெனுமறை யிரைக்குமால், நவபெரும்புவனம் எவ்வகைத்தொழில் நடத்தி யாவரும் வழுத்துநாள், அவனியின்க ணொருதவமிலார் பணியலாவதோ பரவலாவதோ ” என்றும்,

“ சத்தியுஞ் சிவமுமாய தன்மைஇவ் வுலக மெல்லாம்
ஒத்தொவ்வா ஆணும் பெண்ணும் உயர்குண குணியுமாக
வைத்தன னவளால் வந்த ஆக்கம்இவ் வாழ்க்கை யெல்லாம்
இத்தையும் அறியார்பீட லிங்கத்தி னியல்பும் ஓரார் ”

என்றும் போந்த திருவாக்குகளால் உணர்க. இன்னும் மங்கையர்க் கரசியார், காரைக்காலம்மையார், ஔவையார் முதலான பெண்மணிகளாலே உலகம் அடைந்த பெருவாழ்வை எண்ணிப்பார்க்கும் அறிஞர் எவரேனும் பெண்மக்களை இகழத் துணிவார்களா? நமக்குப் பெருஞ் செல்வத்தைத் தரும் இலக்குமியும், அழியாக் கல்வியினை ஊட்டும் சரசுவதியும் பெண்கள் அல்லரோ? உண்மைத் துறவொழுக்கம் என்பது இன்னது என்று உணரும் உயர்ந்த அறிவில்லாத கயவர் சிலர், பெண்மக்களை இகழ்வதும் தம்மனைவி மக்களை விட்டு ஓடிப்போவதுமே துறவு என்று எண்ணித் தம் புல்லறிவேபற்றி உண்மைத் துறவிகளை இகழவுந் தலைப்படுகின்றார்கள். மனைவி மக்களைவிட்டு ஓடுவதுதான் துறவென்று நினைத்து, அங்ஙனமே ஓடிப் பிறகு ஊரார் பெண்கள் காலிலேவிழுந்து அவர்கள் தயவைப் பெறுதற்கு முயன்ற பழிகாரர் எத்தனைபேர்! பெண்களை இகழ்ந்துவிட்டால் தம்மைப் பிறர் ஞானிகள் என மதிப்பர் என்று அவ்வாறு செய்து, பின்னர் அந்தரங்கத்திலே பரத்தையர் வீட்டிலே சென்று அவர் காலால் எற்றக் காத்துக்கிடந்தவர் எத்தனைபேர்! அங்ஙனமாயின் இல்லறத்திற்கும் துறவறத்திற்கும் பேதந்தான் என்னையெனின்;—ஒரு நல்லோன் கற்புடை மனையாளோடுங்கூடி உழவு

வாணிகம் உத்தியோகம் என்னும் முயற்சிகளினாலே நல்வழியிற் பொருள்தேடி, அப்பொருளால் "தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான்" என்னும் ஐவரையும் பாதுகாத்துத், "துறந்தார்க்குந் துவ்வாதவர்க்கும் இறந்தார்க்கும்" துணையாய் நிற்பதே இல்லறமாகும். இனித் துறவறம் என்பது இவர் என்மனைவி இவர் என்மக்கள் இஃது என் வீடு இஃது என் பொருள் என்னும் புறப்பற்றும், நான் உயர்ந்தவன் நான் பெரியேன் நான் மேங்குலத்தேன் என்னும் அகப்பற்றும் இல்லாமல், சிவ நேயத்தின் மிகுந்து சிவ நேயமுடைய மனைவி மக்களைச் சிவனடியாராகக் கருதிச் சிவநேயமுடைய இவரைப்பிரிதல் இவருக்குத் துன்பத்தை விளைக்குமாதலின் அது சிவ காருணியத்திற்கும் சிவநேசத்திற்கும் இழுக்காம் என்றும், இவருடன் கூடியிருப்பது சிவபத்தி சிவஞானங்கள் இருதிறத்தார்க்கும் மிகுதற்கும், ஆண்பாலார் பெண்பாலார் என்னும் எல்லார்க்கும் அவற்றை மிகச் செய்வதற்கும் உதவியாம் என்றும் உள்ளவாறு எண்ணி உலக முயற்சிகளை முழுதும் விட்டு எந்நேரமும் சிவத்தொண்டிலேயே உறைத்து நின்று சிவமயமாய் நிற்பதாகும். இங்ஙனமாகிய உண்மைத் துறவுநிலையே பண்டைக்காலந் தொடங்கி ஆன்றோர்களாற் றழுவப்பட்ட துறவொழுக்கமாம் என்பது, அகத்தியர், புலத்தியர், வசிட்டர் முதலான மகருஷிகளும், திருவள்ளுவநாயனார், அப்பூதியடிகள், சிறுத்தொண்டநாயனார் முதலான சான்றோரும் தம் மனைவிமாரோ டிருந்து காட்டிய உண்மையால் நன்கு உணரப்படும். இது முன்னுங் காட்டினேம். இன்னும் பட்டினத்தடிகள் திருவாய் மலர்ந்தருளிய

"காடே திரிந்தென்ன காற்றே புசித்தென்ன கந்தைசுற்றி
ஓடே எடுத்தென்ன உள்ளன் பிலாதவர்க் கோங்கு விண்ணோர்
நாடே யிடைமரு தீசர்க்கு நல்லன்பர் நாரியர்பால்
வீடே யிருப்பினும் மெய்ஞ்ஞான வீட்டின்பம் மேவுவரே"

என்னுந் திருவாக்கும் நாம் கூறியதே உண்மை என்பதனை நாட்டும். இவ்வுண்மைகள் எல்லாம் ஒருங்குணர்ந்த நம் சுவாமிகள் கற்பொழுக்கமும், சிவபத்தி அடியார் பத்திகளும் வாய்ந்த தம் மனைவியாரை அகலாது, அவரிடத்துச் சிவ நேசம் உடையராய் உலகமுயற்சி விட்டுச், சிவத்தொண்டிலேயே நின்று, மற்றைப் பெண்மக்களையும் இகழாது சிவசத்திவடிவாய்க்கண்டு, அவர்கள் எல்லாரும் சிவபத்தி சிவஞானங்களில் மேம்படுதற் பொருட்டு அவர்களையும் சபைகளுக்கு வரச்

செய்து தாம் செய்யும் சைவசித்தாந்தோபந்நியாசங்களை அவர்களுங் கேட்டுப் பயன் அடையுமாறு பரமோபகாரம் புரிந்து வருகின்றார்கள். இவர்கள் செய்துவரும் பரமோபகாரத்தின் அருமை தெரியாமல் 'இவர் பெண்களைப்போலிருக்கிறார்' என்றும், 'இவர் மனைவிமக்களோடு வசிக்கிறார்' என்றும், 'இவர் ஸ்திரீ சகவாசம் செய்கிறார்' என்றும் பலவாறு இகழ்ந்து பிதற்றும் பேதை மாக்கள் புன்செயலைக்கண்டு சான்றோர் பெரிதும் இரங்குகின்றார்! அங்ஙனமாயின் பட்டினத்தடிகளும் தாயுமான சுவாமிகளும் பெண்மக்களை இகழ்ந்து பாடியது என்னையெனின்;— அறியாது வினாயினாய், அவர்கள் பெண்மக்களை ஒரு சிறிதும் இகழ்ந்தார் அல்லர்; பெண்மக்கள் என்போர் அன்பு அருள் என்னும் சிவசத்தி குணங்களும் நாணம் மடம் அச்சம் பயிர்ப்பு என்னுங் கற்பொழுக்கத்திற்குரிய சிறந்த நற்குணங்களும் நிரம்பப்பெற்றவர் ஆவர்; இம்மெல்லிய குணங்கள் இல்லாவழி அவர்கள் பெண்வடிவில் இருந்தாலும் பெண்கள் என்று சொல்லப்படுதற்கு உரியார் அல்லர்; தன்னாற் காதலிக்கப்பட்ட ஒருவனிடத்தே மாத்திரம் நிலைபெற்ற காதலன்பும், மற்றை எல்லாரிடத்தும் எல்லாவுயிர்களிடத்தும் வைத்த இரக்கமாகிய அருட்குணமும், தன் காதலனிடத்தே வைத்த காதலன்பாகிய கற்பொழுக்கம் நிலைபெறுதற்குக் காரணமான நாணம் முதலாகிய நாற்குணங்களும் சிறிதும் இன்றிப், பொருளாசையும் வெறுங்காம இச்சையும் கடுஞ் சொல்லும் வஞ்சமும் தீய செயலும் நிரம்பிப் பொய் சூதுகள் முதலியவற்றிற் பழகி ஆடவரை வஞ்சித்துக் கெடுக்கக் கங்கணங் கட்டிக்கொண்டிருக்கும் வேசிகளையே அப்பெரியார் அங்ஙனம் இகழ்ந்து பாடினார்; இவ்வேசிகள் பெண்வடிவத்திற் றோன்றினும், இவர்கள் பெண் என்று சொல்லப்படுதற்குச் சிறிதும் உரிமையில்லாதவராய்க் காமம் வெகுளி மயக்கம் என்னும் முக்குற்றங்களுந்திரண்டு உருவெடுத்து வந்த பேய்வடிவங்களேயாவர். ஆகையால், அவர்களை அவ்வடியார் இகழ்ந்ததுபற்றிப் பெண்மக்களையே அவர்கள் இகழ்ந்தார் என்று கூறுதல் பகுத்தறிவில்லா விழலர் கூற்றாம் என்பது கடைப்பிடிக்க. மேலுங் கற்புடைமகளிர் காதல் வயப்பட்டவரேயாய்த் துலங்காநிற்ப, வேசிகள் காமத்தாற் கட்டப்பட்டு உழல்பவர்களா மென்பதும், காதல் என்பது உயர்ந்த சிவசத்திகுணமேயாய் விளங்கக் காமம் என்பது இழிந்த மல சத்தி குணமாய்க் கிடக்கு மென்பதும் 'தொல்காப்பியம்' 'இறையனா ரகப் பொரு

ஞரை' முதலான பழைய உண்மை நூல்களிற் றெளியப்படும். நம் சுவாமிகளும் தாம் எழுதிய 'திருச்சிற்றம்பலக்கோவையுரை'யிற் காதல், காமம் என்பவற்றின் இயல் பெல்லாம் இனிது விளக்கக் காட்டியிருக்கின்றார்கள். எனவே, அப்பெரியார்கள் பெண்மக்களை இகழ்ந்திலரென்றும், வேசிகளாம் பெண்மக்கள் வடிவிற்றோன்றிய மும்மல குணங்களையே இகழ்ந்தனரென்றும் தெற்றெனத் தெளிந்து கொள்க. இங்ஙனமே 'தையல்சொற்கேளேல்,' 'மைவிழியார்மனை யகல்' என்றெழுந்த ஔவையார் திருவாக்குகளும் வேசிகளைச் சுட்டியே வந்தனவாமென்று உணர்ந்துகொள்க. ஆகவே, நற்குண நற் செய்கையிற் சிறந்தவரான நம் பெண்மணிகளைச் சிவபத்தி சிவஞான ங்களில் முதிரச்செய்து அவர்களுஞ் சிவானந்தத்தைப் பெறும்படி செய்வித்தலே உண்மைத் துறவிகள் இன்றியமையாது செய்தற் குரிய கடமையாம்; நம் பெண்மணிகள் அவற்றில் உயர்வார்களா னால் உலகமெல்லாம் சிவமயமாய் விளங்கு மென்பது திண்ணம். இவ்வாறன்றி அவர்களை விட்டு ஓடுவதும், அவர்களை இகழ்வதும் மனத்திட்பமில்லாக் கயவர் செயலே யாகுமல்லது, உண்மைத் துற விகள் செயலாகமாட்டாவென்று உணர்க.

இனி, நம் சுவாமிகள் தலைமுழுதும் மயிர் வைத்திருக்கிறார் என்றும், தலைமயிரைக் கத்தரித்து விடுகிறார் என்றும், முகக்ஷவரம் செய்துகொள்ளுகிறார் என்றும் கூறும் விழலர் உரையைச் சிறிது ஆராய்வாம். சுவாமிகள் குற்றம் ஏதுமின்றிப் பரிசுத்தராய் விளங்கு தலால், அதனைக்கண்டு மனம்வெந்த கயவர் சிலர் 'இவரிடத்துக் குற்றஞ் சொல்லுதற்கு ஏதும் இல்லையே, என் செய்வோம்! இவர் மயிரைச் சுட்டியாவது இகழ்ந்து பேசுவோம்' என்று தாம் மயிர் விவகாரமன்றி வேறேதும் பழகி அறியாமையால் அதனையே சொல்லி இகழ, அம்மயிர் விவகாரத்தை அறிஞர் எவரும் பார்த்து அரு வருப்புற்று அவர் புன்செயலைக் கண்டு காறியுமிழ்ந்து போகின்றார். இனிப் பேதைகள் அவரது மயிர் விவகாரத்தைக் கண்டு மயங்குவா ராதலால், அதனையுஞ் சிறிது பரிகரிப்பாம். எண்சாணுடம்புக்குஞ் சிரசே பிரதானம்; அச்சிரசினும் அதனுள் அமைந்த மூளை உயிர் நிலையாயிருத்தலால் அஃது எல்லாவற்றினுஞ் சிறந்தது; அத்தகைய மூளை யமைந்த பேழைபோல்வதாகிய மண்டையைப் பாதுகாத்தற் பொருட்டாகவே பிறப்புமுதல் அம்மண்டையோட்டின்மேல் மயிர்த் தொகுதி அமைக்கப்பட்டிருக்கின்றது. முற்காலத்திலுள்ளோர் எவ

ரும் தலைமயிரை முழுதுஞ் சிரைத்ததுமில்லை; அரைவாசி சிரைத்ததுமில்லை. கௌதமசாக்கியர் என்னும் புத்தகுரு தமது அரச வாழ்க்கையை விட்டுக் காட்டுக்குப் போனபோது தமது தலை முடியை முழுதுங் களைந்து தலையை முழுதுஞ் சிரைத்துவிட்டார்; அவர்தாம் முதல் முதல் மனைவி மக்களை விட்டுப்போய்த் தலையை முழுதுஞ் சிரைத்தவர். பிறகு அவர் காட்டிலிருந்து நாட்டுக்கு வந்து அற உபதேசங்கள் செய்யத் துவங்கினதிலிருந்து பௌத்தசமயம் இவ்விந்தியா நாடு முழுதும் பரவி, ஏனைச் சமயங்களையெல்லாம் விழுங்கித், தன்னுடைய ஆசாரங்களையே எங்கும் பரப்பி வரலாயிற்று; அப்போது தமது குருவைப்போலவே சந்நியாசங்கொண்ட பௌத்தர்கள் தம் மனைவி மக்கள் முதலினோரைப் பிரிந்துபோய்த் தலையையுஞ் சிரைத்துக்கொள்வா ராஞர்கள். இங்ஙனம் பௌத்த மதமும் அதன் ஆசாரமும் எங்கும் பரவவே, சைவசமயத்தின் உண்மையுணராத சிலரும் துறவொழுக்கத்திற்கு அடையாளம் தலையைச் சிரைப்பதும் மனைவியைப் பிரிந்துபோதலுமே எனப் பிழைபட எண்ணி, அவ்வாறே அதனை அனுசரித்து வரலானார்கள். துறவொழுக்கத்திற்கு அடையாளம் அவையென்று அவர் கொள்ளவே ஏனையோர் இல்லறத்திற்கு அடையாளம் தலையை அரைவாசி அல்லது முக்கால்வாசி சிரைத்து நடுவே தேங்காய்க்குடுமி வைப்பதும் மனையாளோடு கூடியிருப்பதுமேயாமென்று எண்ணி அவ்வாறு நடந்து வருவார்களானார்கள். இவையெல்லாம் பௌத்தமதம் பரவியபிறகு பௌத்தர்களைப் பார்த்துச் செய்துகொண்ட போலி ஆசாரங்களே யல்லாமல் உண்மைச் சைவாசாரங்கள் அல்ல. சைவர்கள் என்போர் சிவவேடந் தாங்கியவர்கள் ஆவர். சிவபெருமானுக்குச் சிரம் முழுதும் முடியுண்டென்பது வேதாகமம் முதலான நூல்களில் இனிது பெறப்படுகின்றது; சிவாலயங்களில் உள்ள சிவவிக்கிரகங்கள் எல்லாம் முடியுடையனவா யிருத்தலுங் கண்டுகொள்க. முற்காலங்களிற் சிவவேடந் தாங்கிய மகருஷிகளெல்லாரும் தலை முடியுடையரா யிருந்தமை எல்லாரும் அறிந்த உண்மையேயாகும். மேலும் சிரசுக்குமேலே பன்னிரண்டங்குலம் வரையிற் பராசக்தி வியாபகமாகலின், சிரசிலுள்ள உரோமத்தைச் சிரைத்தல் பெரிதுங் குற்றமாவதாம்; இதுபற்றியே தீட்சையிற் சிகாச்சேதம் விதித்த சிவாகமங்களும் சிரசிலுள்ள உரோமத்தைப் பன்னிரண்டங்குல நீளம் விட்டு மிச்சத்தைக் கத்தரித்துவிடும்படி கூறினவேயல்லாமல்,

தலையை முழுதுஞ் சிரைக்கும்படியேனும் அரைவாசி முக்கால்வாசி சிரைக்கும்படியேனும் யாண்டுங் கூறினதேயில்லை. தத்துவ இரகசியங்கள் அமைந்த சிவாகம விதிப்படியே நம் சுவாமிகள் சிரசின்கண் உள்ள உரோமத்தைச் சிரைக்க இடந்தராமல் முழுதும் வளர்த்துப் பன்னிரண்டங்குலம் விட்டு மிச்சத்தைக் கத்தரித்துவிடுகிறார்கள். இவர்கள் செய்துவரும் இஃது உண்மையான சைவாசாரமாய் இருப்பவும் இதனை யறியாத மடவோர், பௌத்தமத ஆசாரத்தைக் கைப்பற்றித் தலையைச் சிரைக்கும் தமது போலியாசாரத்தையே மெய்யென நம்பி அதற்கு இணங்காததுபற்றி நம் சுவாமிகளைக் குறைகூறப் புகுந்தது பெரிதும் நகையாடற்பாலதாம். கோவணங் கட்டாத ஊரிற் கோவணங் கட்டினவர் ஒருவர் இகழப்படுதல் போலப் பௌத்தமதப் போலிப் பொய்யாசாரம் நிறைந்த பொய்யர் நடுவில் சைவாசார உண்மையைக் கைக்கொண்டொழுகும் நம் சுவாமிகள் பழிக்கப்படுதல் அப்பொய்யர் மடமையைக் காட்டுகின்றதன்றிச் சுவாமிகளின் உண்மையைச் சிறிதும் மாறுபடுத்துகின்றதில்லையென்றுணர்க. தலைமேற் பிறவிமுதற் பாதுகாவலாய் அமைந்த மயிரைச் சிரைத்தலால் மூளையிற் கொதிப்பேறிக் கண்களுக்குப் பலவகையான நோய்களை வருவிப்பதோடு உடம்பிலும் பல பிணிகளை விளைவிக்கின்றதென்று தேகதத்துவ சாஸ்திரிகளுங் கூறுகிறார்கள். ஒரு காரணமுமின்றிச் சுத்த முழு மூடத்தனமாய் ஆகமங்களுக்கு மாறாகத் தாம் கைப்பற்றி வரும் மயிர் சிரைக்கும் வழக்கத்தை நம் சுவாமிகளும் அனுசரியாததுபற்றி அவர்களைக் குற்றங் கூறுங் கயவர் பொய்யாசாரவியல்பு இதனாற் பொள்ளெனப் புலப்பட்டது. இனி இக்கயவர் வெள்ளறிவிற்கு நம் சுவாமிகள் முக க்ஷவரம் செய்துகொள்வதும் ஒரு குற்றமாகக் காணப்படுகின்றது. முகத்தின் கீழும் பக்கங்களினும் வளரும் மயிர் பிறவியிலன்றி வாலிபப்பருவம் முதற்கொண்டு வளருதலானும், அதுதானும் முகப்பாதுகாப்பிற்கு அவசியம் அல்லாததோடு முகத்தில் அழுக்குச் சேர்வதற்கும் முகத்தை விகாரப்படுத்துவதற்குங் காரணமாயிருத்தலானும், சுத்தஞ் சுசியையே விரும்பும் நம் சுவாமிகள் அவ்வுரோமத்தைக் களைந்துவிடுகின்றார். சரீரசுத்தமானது தேகத்தை ஆரோக்கியமாய் வைத்து ஆயுளை நீளச் செய்வதற்கும், யோகஞானங்களை விருத்தி செய்து சிவானந்தத்தைப் பெறுவித்தற்கும் காரணமாயிருக்கின்றது. தேகப்பாதுகாப்பின் விசேஷத்தைத் திருமூல நாயனார்

“ உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே ”

என்று அருளிச்செய்த திருமந்திரத் திருவாக்கான் இனிது உணர்ந்துகொள்க. சுவாமிகள் இவ்வுண்மை யுணர்ந்து வதன சுத்தத்தின்பொருட்டு முகரோமத்தைக் களைந்துவிடுகின்றாராக, இதனை ஒரு குற்றமாகச் சொல்லவந்த மக்கட்பதர்கள் தாம் சுத்தமாகவுஞ் சுசியாகவும் இருக்க விருப்பம் இல்லாவிட்டால், கருங்குரங்குபோலத் தமது முகத்தில் மயிர் வளர்த்துக்கொண்டு தமது விகார முகத்தைத் தம்மோடொத்தார் மாட்டுக் காட்டி மகிழ்ந்துகொள்ளுகிறது தானே! இன்னும் இக்கயவர் இதுவேயன்றி வேறு சிலவற்றையுங் குற்றமாகச் சொல்ல எழுவர்! ‘ இவர் என் குளிக்கிறார் முழுகுகிறார்? இவருக்கு ஆடைதான் எதுக்கு? நிருவாணமாகவன்றோ துறவிகள் இருத்தல் வேண்டும்? ஆகாரம் உண்ணலாமோ? நாடு நகரங்களில் வரலாமோ? வண்டிகளிற் போகலாமோ? வாய் திறந்து இவர் பேசுவதுதான் எதுக்கு? ’ என்றெல்லாங் கேட்கவும் முந்துவர்! இப்படியெல்லாம் இக்கயவர் யாரிடத்து வினவுவார்களென்றால், பரோபகாரிகளாய் உண்மைத் துறவிகளா யிருப்பவர்களிடத்திலேதான். கொலையும், பொய்யும், சூதும், வாதும், வஞ்சனையும், வியபசரித்தலும் உடைய போலித் துறவிகளினிடத்திலே இப்படிறர் வாயைத் திறவார்; அப்போலித் துறவிகளிடத்தில் மிகுந்த காசு இருப்பது தெரிந்து அதனை அவர்களிடமிருந்துபறித்துக்கொள்ளும்பொருட்டு அவர்கள் காலிற் பன்முறையும் வீழ்ந்து ‘ சுவாமிகாள்! தாங்களே சற்குரு, சிவமே அடியேங்களை ஆட்கொள்ளுதற்பொருட்டு இக்குருவடிவில் எழுந்தருளியது ’ என்று பலவாறெல்லாம் புகழ்ந்து கவிபாடி, அவர் செய்யும் தீயசெயல்களுக்கெல்லாம் தாமும் உடனாயிருந்து உதவிசெய்து அவர் காசைப்பறித்து மகிழ்ந்து ஒழுகுவர். இங்ஙனமாகிய போலித்துறவிகளும், இவர்களுக்குத் துணையாய்நின்று இவர்களைப்புகழ்ந்து எத்திப் பரோபகாரிகளான உண்மைத்துறவிகளை எதிர்த்திரியும் பாதகப்பேய்களும் இத்தென்னாட்டை விட்டு ஒழியும் நாள் எந்நாள்! சைவசித்தாந்தங் கிளர்ச்சிபெற்று அப்போதுதான் துலங்கும். இனி உச்சந்தலைமுதல் உள்ளங்கால் வரையில் பொன்னாபரணம் இரத்தினாபரணங்கள் அணிந்துகொள்ளும் சந்நியாச மடாதிபதிகளி

னிடத்தேயெல்லாம் குற்றங்காணுது, நம் சுவாமிகள் தஞ்சீடர்களால் இடப்பட்ட சிலமோதிரங்கள் விரல்களில் அணிந்திருப்பதை அக் குறும்பர் ஒரு குற்றமாகக் கூறினர். தம் சீடர்களின் வேண்டுகோளா லும், உயர்ந்த பிந்து தத்துவத்தின் ஒளி பொன்னிலும், இரத்தினங் களிலும் விளங்குதலாலும் அவற்றை நம் சுவாமிகள் அணிந்தனர்கள். வாளா அலங்காரத்தின் பொருட்டாகவன்றிப் பொன்னிலும் இரத் தினங்களினும் உள்ள நன்மையின் பொருட்டாகவே அவை உயர்ந் தோராலுங் கைக்கொள்ளப்படும் உண்மைகள் எல்லாம் ஈண்டு விரிப் பிற் பெருகும். இனி இங்ஙனமெல்லாம், குற்றமல்லாத நலங்களையுந் தமது அறியாமையாலும் பொறாமையாலும் அகங்காரத்தாலுங் குற் றமாகப்பாவித்து நம் சுவாமிகளைக் குறை கூறப்புகுந்த பொல்லாப் படிறர் செயல் எதுபோல்வதென்றால், பருத்த உதடுள்ள மாறுகண் ணனை ஈழக்குலச்சான்றான் ஒருவனும், ஒரு நொண்டியும், கறுத்துத் தடித்த சொத்தைப்பல்லன் ஒருவனும், வியாபாரத்தாற் பிறர்பொரு ளைமோசஞ்செய்து ஓடிய வறியன் ஒருவனும், சிறிது கற்ற ஒரு கள் வனும், தடித்த குரலுள்ள ஒரு சமணனும் தம்மிலே கூடிக்கொண்டு தேசசும் நல்லழகும் வாய்மையும், உயர்ந்த அறிவும் பரோபகாரமும் உள்ள சிவஞானி ஒருவரைப்பார்த்து 'இவர் உதடுங்கண்ணும் பெண் களுக்கு இருப்பதுபோல் இருக்கின்றனவே; என்னுடைய கண்ணை யும் உதட்டையும் போல கொள்ளையாய்ப் பருத்து அல்லவோ ஆண் களுக்கு இருக்கவேண்டும்?' என்றும், 'நீண்டுயர்ந்த இவர் கால்கள் பார்ப்பதற்கு அழகாயில்லை, என் கால்களைப் பாருங்கள், மற்றவர்க ளுக்கு இருப்பதைப்போற் சாமானியமாய் இராமல் எவ்வளவு அற் புதமாய்ச் சூம்பி வளைந்திருக்கிறது!' என்று கோலையூன்றி எழுந்து காட்டியும், 'என்ன இவருடைய உடம்பு அசல் பெண்பிள்ளையுடம்பு போல் சிவந்து மெல்லிதாயும், இவர் பற்கள் புலால் நாற்றமுள்ள கடற் சிப்பியிலிருந்து எடுக்கும் முத்துப் போலவும் இருக்கின்றன. சீ! ஆண்பிள்ளை உடம்பு என்னைப்போல வன்றோ இருக்கவேண்டும் பாருங்கள், என்னுடம்பு கருநாகப்பழம்போல் கறுத்துத் தடித்து எவ்வளவு திடமாய் இருக்கின்றது. என் பற்களைப் பாருங்கள்; தேய் ந்து புலிபற்கள்போல எவ்வளவு கூராயுந் தீரமாயும் இருக்கின்றன?' என்று தன் பல்லை இளித்துக் காட்டியும், 'இவரைப் பாருங்கள் பொருளை வைத்துக்கொண்டு கவலைப்படுகின்றார். நானோ என் கை யிற் பொருள் சிறிதுமில்லாமலே பிறரை ஏமாற்றி அவர் பொருளை

வைத்துப் பெருவியாபாரஞ்செய்து, அப்பொருளை இழந்துபோனாலுங் கவலை எள்ளளவுமில்லாமல் எவ்வளவு சாமர்த்தியத்தோடு வாழ்நாட் கழிக்கிறேன் ; எந்த மடத்திற்குப் போனாலும் எனக்குச் சோறு கிடைக்கிறது' என்று தன் திறமையைச் சொல்லியும், 'பாருங்கள், இவர் சொல்லாதவற்றையுஞ் செய்யாதவற்றையும் புரட்டிச் சொல்லிப் பிறர் நம்பும்படி செய்துவிட்டேன்; இவர் தம் நூல்களில் எழுதிய அரியபொருள்களை யெல்லாம் நான் எடுத்து என்னுடைய சொந்தமாகச் சொல்லிவருகிறேன். இனிமேல் எல்லாரும் என்னுடைய கல்விப் பொருளையே அவர் எடுத்துக் கொண்டதாக நம்புவார்கள்; எனக்கு உள்ள எங்கள் சாதித் திறமையை எப்படித்தான் சொல்லுவேன் !' என்றும், 'பாருங்கள், இவர் பெண்குரல்போலப் பேசுகிறார். என் குரலைப் பாருங்கள் ; ஒரு சத்தம்போட்டேனானால் இந்த வீட்டிலுள்ள எலி எல்லாம் ஓடிப்போய்விடும்; இதுவன்றோ ஆண்குரல் ! மேலும், இவர் சிவாகமங்களின் உண்மைப் பொருள்களையெல்லாம் சொல்லிச் சைவத்தை எங்கும் பரவச் செய்கிறார் ; நான் அதனைத் தடுக்க ஓர் உபாயஞ் செய்துவருகிறேன் ; சிவாகமங்களை உயர்த்திச் சொல்வதுபோலப் பேசி அவற்றின் உண்மைகளைப் புரட்டிச் சொல்லிவருகின்றேன் ; என் சொற்களைக் கேட்டுச் சிலர் ஏமாந்து அவர் சொல்வதைப் பிசகு என நினைக்கிறார்கள் ; இதுவன்றோ எனது சமணமதத்தை மெதுவாகப் பரவச்செய்தற்கு உபாயம் !' என்று தலையைக் கம்பீரத்தோடு ஆட்டிப் பேசியும் ஒருவர் பின் ஒருவராய்த் தம்மில் ஆரவாரஞ் செய்து தம்மைத்தாமே கொண்டாடிய கதையையே ஒத்திருக்கின்றது.

இனி, நம் சுவாமிகள் நம் உண்மைச் சைவர்களேயன்றி மற்றை சமயத்தவர்களும் சைவசித்தாந்த உண்மைகளைத் தெரிந்து உய்யும் பொருட்டுச் 'சமரச சன்மார்க்க நிலையம்' என்னுந் திருக்கழகம் ஒன்று ஸ்தாபித்து, அதனை 'அந்தரங்கநிலை' 'பகிரங்கநிலை' என இரண்டாக வகுத்து, இந்நிலைகளிற் சேர்தற்குரிய பக்குவமுடைய நல்லவர்களை அதிற் சேர்ப்பித்து, அவர்களுக்குச் சுகாதார வாழ்க்கையின் இயல்புகளையும், நல்லொழுக்கங்களையும், யோகநூல் ஞானநூல்களின் உண்மைகளையும் உணர்த்தி வருகின்றார்கள்; இம்முயற்சி இனிது நடத்தற்காகப் பகிரங்கநிலை மாணவர் ஆறு ரூபாயும், அந்தரங்கநிலை மாணவர் பன்னிரண்டுரூபாயும் காணிக்கையாகச் செலுத்தி வருகிறார்கள். இங்ஙனஞ் செலுத்தும் இச்சிறு காணிக்கைப்பொருள்

நூல்கள் பத்திரிகைகள் பதிப்பிடுதல், அவற்றை வெளியிடுதல், உபந்நியாசங்கள் செய்தற்குப் பலவூர்கட்குச் செல்லுதல் முதலான நிலைய தருமங்களுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. இவை அவ்வளவும் நம் சுவாமிகள் தம்பொருட்டாகவன்றிப் பிறர் பொருட்டாகவே செய்து வருகிறார்கள். இங்ஙனம் இவர்கள் செய்துவரும் நன்முயற்சிகள் எல்லாம் குற்றமாம்; தாம் செய்துவரும் தீயசெயல்கள் குற்றமில்லையாம் என்று சொல்லுங் கயவர் வேறெதுதான் சொல்லி இகழார்! பிரபுக்களிடஞ் சென்று அவர்களைப் புகழ்ந்து இச்சகம் பேசியும், மகளிரை அவர்களிடஞ் சேர்த்துவைத்தல் முதலான இழிதொழில்களைப் புரிந்தும், உங்கள் தருமங்களை அவர் இகழ்கின்றார் இவர் இகழ்கின்றார்; அவ்விகழ்ச்சிகளைப் பரிகரிக்கப் போகின்றோம்; அதற்குப் பொருள் தாருங்கள் என்று பகட்டியும், அப்பிரபுக்களிடம் ஏராளமான பொருளைப் பறித்து அவர்களையும் பழிபாவங்களில் வீழ்த்தித் தாம் பெற்ற பொருளையும் வேசிக்குஞ் சூதுக்கும் சாராயத்திற்கும் அழித்துத் தாமும் பாவப்படுகுழியில் வீழ்ந்து உலகிற்குப் பெரியதோர் இன்னாமையைச் செய்கின்ற தீயபாதகர் செய்கையன்றோ படுகுற்றமாவது? அங்ஙனமின்றி 'எல்லாரும் நல்வழிப்படுங்கள்! உலகத்தையே பொருளாக மதித்து ஆன்ம ஞானத்தை இழவாதீர்கள்! எல்லாரிடத்தும் எல்லா வுயிர்களிடத்தும் அன்பு வைத்து ஒழுகுமின்கள்! சிவபெருமான் திருவருள் விளக்கத்தையே நாடுமின்கள்! எல்லா வுயிர்களின் துன்பத்தையும் நீக்க முயலுமின்கள்! எல்லாரையும் மேன்மேல் அறிவில் உயரச்செய்ய முந்துமின்கள்! ஞானநூல்களையும் யோகநூல்களையும் ஓதி அவற்றின்படி நடமின்கள்!' என்று எல்லாரையும் அழைத்துத் தாம் அறிந்தவற்றை வஞ்சமின்றிப் பிறரும் அறியும்படி போதித்து நல்வழிப்படுத்தும் நம் சுவாமிகளின் நன்முயற்சி எல்லாராலும் பெரிதும் பாராட்டற்பாலதன்றிச் சிறிதும் இகழற்பாலதன்று. உண்மையறிவுடையோர் எல்லாரும் நம் சுவாமிகளின் நன்முயற்சியைப் பெரிதும் புகழ்ந்து வருகின்றார். கண்ணில்லாக் குருடனுக்கு ஞாயிற்றின்ஒளி புலப்படாமையோடு இருளே மிகுந்து தோன்றுதல்போல, உண்மையறிவில்லாக் கயவர்க்குச் சிவஞானச் செல்வராகிய நம் சுவாமிகளின் சிவஞானப் பெருமை புலப்படாமற்போதலும், அஃது அவர்க்குக் குற்றமாகக் காணப்படுதலும் பொருத்தமேயாம். இனி, நற்குண நற்செய்கையிற் சிறந்த மேலோரெல்லாரும் நம் சுவாமிகளின் அருமை பெரு

மைகளையும் சிவஞான முயற்சியினையும் வியந்து கொண்டாடி வருத லின், நம் சுவாமிகள் எடுத்த 'சமரச சன்மார்க்க நிலைய' அரும் பெரும் புண்ணியகாரியம் உமாநாதன் றிருவருளால் இனிது தழைத் தோங்கி உலகத்திலுள்ள சருவான்மாக்களுக்கும் இம்மை மறுமைக் குரிய எல்லாப் பயன்களையும் தரும். சுபம்!

*"பிறர்க்கின்னா முற்பகற் செய்யிற் றமக்கின்னா*
*பிற்பகற் றாமே வரும்."*

*"பிறன்பழி கூறுவான் றன்பழி யுள்ளுந்*
*திறந்தெரிந்து கூறப் படும்."*

*"அன்பீனும் ஆர்வ முடைமை யதுவீனும்*
*நண்பென்னு நாடாச் சிறப்பு."*—**திருக்குறள்.**

நாகை - ஸி. கோபாலகிருஷ்ணன்,
தமிழ் நாவலிஸ்ட்.